Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3 - No. 12.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் ௩	பிரமோதூத ஆண்டு மார்கழித் திங்கள் 1930 ௵ டிசம்பர் ௴	இதழ் ௧௨

உள்ளுறை — பக்கம்

திருவெம்பாவைக் கருத்து... ... ... உ௬௭
சிவஞானபோத விளக்கம் உ௬௭
நினைப்பற நினைத்தல் உ௭0
கார்த்திகை உ௭உ
இராமநாதனவர்களின் தேகவியோகம் உ௭௫

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.,

உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1-8-0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2-0-0.
தனிப் பிரதி அணா 3.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவ சித்தாந்த மகா சமாஜம்—சைவர் மகாநாடு

இருபத்தைந்தாம் ஆண்டு நிறை விழா

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு நிறை விழாவும் சைவர் மகாநாடும் சென்னைப் பச்சையப்பன் கலாசாலை மகா மண்டபத்தில் 1930-ம் ௵ டிசம்பர் மீ 25, 26, 27-ம் தேதிகளுக்குச் சரியான நிகழும் பிரமோதூத ௵ மார்கழி மீ ௧௦, ௧௧, ௧௨-ம் தேதிகளாகிய வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி முதல் தனவணிக நாட்டு மகிபாலன்பட்டி சைவத் திருவாளர் - **பண்டிதமணி - மு. கதிரேசன் செட்டியார் அவர்கள்** தலைமையில் நடைபெறும். முதல் நாள் காலையில் சைவ மங்கையர் மகாநாடும் இரண்டாம் நாள் காலையில் சைவ இளைஞர் மகாநாடும், இவ்விழாவையொட்டி நடைபெறும். ஒவ்வொரு சைவரும் பல அன்பர்களோடும் பல சைவ சபைப் பிரதிநிதிகளோடும் போதருமாறு வேண்டுவதோடு தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு சைவ சபையும் குறைந்தது ஒரு பிரதிநிதியையாவது அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன். நிகழ்ச்சிமுறை பின்னர் வெளிவரும்.

இங்ஙனம் :

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை 10—12—30

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

ம தி ப் பு ரை

அன்பர் போற்றிக் கலிவெண்பா :— இச்சிறுநூல் இலக்கண விளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகரின் பேரர் வித்வான் தியாகராஜ தேசிகர் அறுபான்மும்மை நாயன்மார் பேரில் இயற்றியதாகும். இது நூற்றெண்பத்தாறு கண்ணிகளையுடையது; அடியார்களது சரிதச் செய்திகளை விளக்கமாகவும் சுருக்கமாகவும் கூறுவது. சொல்லழகு வாய்ந்தது. நித்தியப்படி பாராயணம் செய்தற்குத் தக்கவாறு அமைந்திருப்பதோடு அடியார்களது அரும்பெரும் செய்கைகளைத் தெளிவுறக் காட்டுவது. விலை அணா மூன்றே. வேண்டுவோர் நமக்காவது, பதிப்பாசிரியர் இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை சோமசுந்தர தேசிகர் 1/25 நாச்சியப்ப செட்டித் தெரு, மயிலாப்பூர் என்ற விலாசத்துக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பி ரி வா ற் று மை

நமது சமாஜத்து முதல் ஆண்டு நிறைவிழாவைச் சிதம்பரத்திலும், பதினேழாவது இருபதாவது ஆண்டு விழாக்களைச் சென்னையிலும் தலைமை வகித்துச் செவ்வனே நடாத்தியவரும், இலங்கைத் தீவிலுள்ள தமிழ் மக்களும் சைவமக்களும் முன்னேற்றமடைவதற்கென்றே தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தவரும், கல்வி, அறிவு, அன்பு, ஒழுக்கம் முதலியவற்றிற் சிறந்தவரும் ஆகிய உயர் சைவத்திருவாளர் சர். பொன்னம்பலம் இராமநாதன் K. C. C. M. G. அவர்கள் சிவபத மடைந்தமை கேட்டுப் பெருந்துயருற்றோம். பொதுவாகச் சைவ வுலகமும் சிறப்பாக யாழ்ப்பாணம் அவர் பிரிவால் பெருநஷ்ட மடைந்தது. நமது பிரிவாற்றாமையை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

மலர் ௩	பிரமோதூத ஆண்டு மார்கழித் திங்கள் 1930 ௵ டிசம்பர் ௴	இதழ் ௧௨

திருவெம்பாவைக் கருத்து

[பத்திராசிரியர்]

"திருவெம்பாவை" என்பது திருவாசகத்துள் இருபது பாடல்கள் அடங்கிய ஒரு பதிகம். "திருவண்ணாமலையில் அருளியது, சத்தியை வியந்தது" என்றுஇப்பதிகத்தின் தலைப்பில் திருவாசகப் புத்தகங்களி லெல்லாம் குறிக்கப்பட்டிருப்பது நோக்கத் தக்கது. பொதுவாக திருவாசகத்தில்சைவ சித்தாந்த உண்மைகளெல்லாம் மாணிக்கச் சுரங்கம் போல் பொதிந்திருப்பினும், சிறப்பாக அவ்வுண்மைகளிற்சிறந்தன வற்றை யெல்லாம் ஒருங்கே "திருவெம்பாவை" என்ற ஒரு பதிகத்திலேயே காணலாகும் என்பது ஆன்றோர் துணிபு. ஆகையால் இப்பதிகத்தை மார்கழி௴ திருவாதிரைக்கு முன் பத்து நாளாவது இடைவிடாது ஓத வேண்டும் என்று சைவப் பெரியார்கள் பண்டைக்காலத்தே ஆணையிட்டுள்ளார்கள். இக்காலத்தில் திருவெம்பாவை ஓதுவதற்கென்றே பல கோயில்களிலும் பலஊர்களிலும் மானியங்களும் மிராசுகளும் சுதந்தரங்களும் வழங்கப்பட்டுள்ளன. முறைப்படி பூஜைகள் நடைபெறும் சிவாலயங்களில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந்திருமுறை, பெரிய புராணம் என்ற முறைப்படி தீபாராதனைக் காலங்களில் ஓதுவார் மூர்த்திகளைக் கொண்டு திருமுறை முழக்கம் செய்வதைநிறுத்தி, மேற்கூறிய பத்து நாட்களிலும் திருவெம்பாவைப் பாடல்களையே எல்லாக்கால பூஜைகளிலும் எல்லாச் சந்நிதிகளிலும் ஓத வைப்பது வழக்கமாயிருக்கிறது. மேலும் இந்த

பத்து நாட்களில் காலையில் மாணிக்க வாசக சுவாமிகளை எழுந்தருளச் செய்து நான்கு வீதிகளிலும் குறித்த சந்திகளில் ஒன்று அல்லது இரண்டு பாட்டாக ஓதி தினந்தோறும் திருவெம்பாவைப் பதிகம் முழுமையையும் முடித்து வைப்பதும் வழக்கமாயிருக்கிறது. இவைகளெல்லாம் முறைப்படி திருக்கோயில் வழிபாடு செய்வோர்க்குத் தெரிந்தவைகளே. இத்தகைய நிகழ்ச்சிகள் பலவற்றினின்றும் "திருவெம்பாவை"யின் அருமையும் பெருமையும் ஒருவாறு விளங்கும்.

சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுவது யாதெனில், மாணிக்க வாசக சுவாமிகள் திருவண்ணாமலையில் மார்கழி மாதத்தில் எழுந்தருளி யிருந்த போது விடியற்காலையில் பெண் பிள்ளைகளெல்லாம் ஒருவரை ஒருவர் எழுப்பி அழைத்துக்கொண்டு திரள் திரளாகக் குளத்துக்குச் சென்று நீராடி வருவதைக் கண்டு அந்த நிகழ்ச்சியை நவ சத்திகள் தம்முள் தொழிற்பட்டுப் பிரபஞ்ச காரியம் நடத்துவதற்கு உவமையாக்கி இப்பதிகத்தைப் பாடியருளினார் என்பதே. இதிலிருந்து சாதாரண உலக நிகழ்ச்சிகளைக் கூட ஞானோபதேசம் செய்யும் கருவிகளாக மாற்றும் சக்தி வாதவூரடிகட்குளத்துணைமிகுதியாக இருந்தது என்றறியலாம். இவ்வரிய சக்தி பெற்றிருந்தமையால்தான் அவரைச் சைவ சமயாசாரியர்கள் நால்வருள் ஒருவராகச் சைவ நன்மக்கள் கொள்ளுகின்றனர்.

இப்பதிகம் "சத்தியை வியந்தது" என்று குறிப்பிட்டிருப்பது பிரபஞ்ச சிருட்டிக்கு ஆதாரமாய் நின்ற அம்பிகை, கணம்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசத்தி, ஆதிசத்தி, ஞான சத்தி, கிரியாசத்தி என்னும் ஒன்பது சத்திகளைக் குறிப்பதாகவும் முதல் எட்டுப் பாடல்கள் முறையே மனோன்மணி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை யென்ற சத்திகளுள் முதற்சத்தி இரண்டாவதுசத்தியை எழுப்புவதற்கும், பிறகு இருவரும் சேர்ந்து மூன்றாவது சத்தியை எழுப்புவதற்கும் இவ்வாறே எண்மருங்கூடி ஒன்பதாவது சத்தியை எழுப்புவதற்கும் கூறப்பட்டதாகவும் சாத்திரம் வல்ல நிபுணர்கள் கூறுகின்றனர். அதாவது பிரபஞ்ச ஒடுக்கத்தில் சத்திகள் எந்த முறையில் ஒடுங்கினவோ, அதற்கு நேரெதிர் முறையில் பிரபஞ்ச சிருட்டிக்காலத்தே அவைகள் மீண்டும் தோன்றுகின்றன வென்பதே இந்த துயிலெழுப்பு முறையால் குறிக்கப்பட்டது. இது சைவசித்தாந்தத்துக்கு அடிப்படையாகவுள்ள சத் காரிய வாதத்துக்குப் பெரிதும் பொருத்தமானது.

சிருட்டிதத்துவநுட்பங்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமல்ல. சுருங்கக் கூறின் மேல்நாட்டுக் கூர்தல் முறை (Theory of Evolution) என்பதைத்தான் நமது சமயம் கூறுகின்றது எனலாம். ஆங்கிலத்தில் "Indestructibility of Matter" (பொருள் அழிவதல்ல, மாறுவதே) எனப்படும் கொள்கைதான் சத்காரிய வாதமெனப்படும். "இல்லது வாராது உள்ளது போகாது" என்பதுவும் ஈதே. "அவனவளது வெனும் அவை மூவினைமையிற் றோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்" என்பதும் இதைக் குறிக்கிறது. "If things evolve

in one order, they undergo involution in the inverse order" என்ற உண்மைதான் எங்கெந்த சக்தி எதில் ஒடுங்குகிறதோ மீண்டும் அதினின்றே தோன்றும் என்று நமது சமயத்தில் கூறப்பட்டுள்ளது. பள்ளியறை, திருப்பள்ளியெழுச்சி முதலிய கோயிற் சடங்குகளும் இதையே வலியுறுத்தும். தீக்ஷா சடங்குகள், அபரக்கிரியைச் சடங்குகள் பலவற்றில் ஓதப்படும் மந்திரங்களும், கிடைக்கும் விவரங்களும் இதையே வலியுறுத்தும். மேற்கொண்டு விரிக்கில் இப்பொருள் பெருகும்.

இனி "திருவெம்பாவை"யுள் பொதிந்துள்ள அரிய கருத்துக்கள் சிலவற்றை விளக்குதும். மேற்கூறியபடி முதல் எட்டுப்பாடல்களும் ஒருவரையொருவர் துயிலெழுப்பு முறையில் கூறப்பட்டதாகவும் ஒன்பதாவது பாடலிலிருந்து ஒன்பதின்மரும் ஒருங்கு கூடி இறைவனை வழுத்தியதாகவும் கூறுவது ஆன்றோர் வழக்கு. முதல் எட்டுப் பாடல்களில் "மாதே வளருதியோ," "போதாரமளிக்கே நேசமும் வைத்தனையோ" "வந்துன் கடைதிறவாய்," "கண்ணைத்துயின்றவமே காலத்தைப் போக்காதே," "படிறீ கடைதிறவாய்," "இன்னம் புலர்ந்தின்றோ...........வாய் திறவாய்," "இன்னந்துயி லுதியோ," "ஈதென்ன வுறக்கமோ வாய்திறவாய்" என்று முறையே ஒவ்வொரு பாடலில் ஒவ்வொரு குறிப்பாக வந்திருப்பது இக்கொள்கையை வலியுறுத்தும். ஒன்பதாவது பாடல் முதற் கொண்டு இத்தகைய குறிப்பின்மையும் அனைவரும் சேர்ந்து பாடும்முறைக் குறிப்புண்மையும் நோக்கத்தக்கன. இனி ஒவ்வொரு பாட்டிலுமுள்ள சில செம் பொருள்களைக் கூறுதும்.

ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்
தடங்கண், மாதே வளருதியோ வன்செவி
யோ நின்செவிதான் மாதேவன் வார்கழல்கள்
வாழ்த்திய வாழ்த்தொலிபோய், வீதிவாய்க்
கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதாரமளியின்மே னின்றும் புரண்டிங்
ஙன், ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னே
யென்னே ஈதே யெந்தோழி பரிசேலோ
ரெம்பாவாய். ௧

(௧) "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி" என்ற வாக்கில் சைவசித்தாந்த சாத்திரம் பதிநான்கிலும் கூறப்பட்ட பதியிலக்கணம் அனைத்தையும் அமைத்துக் காட்டலாம். அச்சோதியை "யாம் பாடக் கேட்டேயும்" என்ற இடத்துக் குறிக்கப்பட்ட பாட்டு திருவடிப் புகழே யென்பது, "மாதேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி" என்பதிலிருந்து விளங்கா நிற்கும்.

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகல்
நாம் பேசும்போ தெப்போதிப் போதா ரம
ளிக்கே, நேசமும் வைத்தனையோ நேரிழை
யாய் நேரிழையீர் சீசீ யிவையுஞ் சிலவோ
விளையாடி, ஏசு மிடமீதோ விண்ணோர்க
ளேத்துதற்குக் கூசு மலர்ப்பாதந் தந்தருள
வந்தருளுந், தேசன் சிவலோகன் தில்லைச்
சிற் றம்பலத்துள் ஈசனார்க் கன்பார்யாம் ஆரே
லோ ரெம்பாவாய். ௨

(௨) பாசு அம்பரம் சோதி (பச்சை நிறமாகிய அருட்சத்தி கலந்த அம்பரமாகிய சோதி—அன்பு சிறந்த சோதி என்பாருமுளர்) விரைவில் எழுந்திராத சத்தியோடு நிகழ்ந்த சம்பாஷணைக் குறிப்புகள் இப்பாட்டில் உள. "விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசுமலர்ப் பாதந்தந்தருள வந்தருளும் தேசன்" என்பதை ஊன்றிநோக்குக. தேசன்= தேஜஸ் உடையவன்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென் அத்தன் ஆனந்தன் அமுத னென் றள்ளூறித், தித்திக்கப் பேசுவாய் வந் துன் கடைதிறவாய் பத்துடையீர் ஈசன் பழ வடியீர் பாங்குடையீர், புத்தடியோம் புன்மை தீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ எத் தோநின் அன்புடைமை யெல்லோ மறியோ மோ, சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம் பாவாய். ௩

(௩) என் அத்தன் ஆநந்தன் அமுதன் என்று அள்ளூறி(=சமீபத்தே உள்ளே பொருந்தி). அள்ஊறி= வாயூறி என்பாருமுளர். பத்துடையீர்=பற்றுடையீர். பாங்குடையீர்= உரிமையுடையீர், பக்ஷமுடையீர், புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டால்=புதிய அடியேங்கள் மலங் கெடுத்து ஆட்கொண்டு அருளினால், எத்தோம்=எத்தன்மை யுடையோம். இப்பாட்டிலும் சம்பாஷணைக் குறிப்புகள் உள.

ஒள்நித் திலநகையா யின்னம் புலர்ந்தின் றோ வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந் தாரோ, எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங் கண்ணைத் துயின்றவமே காலத் தைப் போக்காதே, விண்ணுக் கொருமருந் தை வேத விழுப்பொருளைக் கண்ணுக் கினி யானைப் பாடிக் கசிந்துள்ளம், உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந் தெண் ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். ௪

(௪) ஒள்நித்திலநகையாய் = ஒளிர்கின்ற முத்துபோன்ற பற்களையுடையாய். "கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்து உள்ளம் உள்நெக்கு நின்று உருக" இத்தகைய குறிப்புகள் பல திருவாசகத்தில் உள.

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம் போலறிவோ மென் றுள்ளப் பொக்கங்க ளேபேசும், பாலூறு தேன்வாய்ப்படிறீ கடை திறவாய் ஞாலமே விண்ணே பிறவே யறி வரி யான், கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ் சீலமும் பாடிச் சிவனே சிவனே யென், றோல மிடினும் உணராய் உணராய் காண் ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

(௫) அயனும் மாலும் காணாதானை நாமோ அறிவோம் என்று எண்ணற்க. ஞாலமே விண்ணே பிறவே=ஞாலமும் விண்ணும் பிறவுமே. கோலமும்= வடிவமும். கோது+ஆட்டும் சீலமும் (=ஒழுக்கமும்)

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை நானே யெழுப்புவ னென்றலு நாணாமே, போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ வானே நிலனே பிறவே யறிவரியான், தானே வந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டரு ளும் வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய், ஊனே யுருகா யுனக்கே யுறு மெமக்கும் ஏனோர்க்குந் தங்கோனைப் பாடே லோ ரெம்பாவாய். ௬

(௬) "நாளை வந்து உங்களை எழுப்புவல்" என்று நேற்று நீ கூறினையே. வானே நிலனே பிறவே=வானும் நிலனும் பிறவும், தலையளித்தாட் கொண்டருளும் வான்வார் கழல்=கடைக்கண் சாத்தி ஆட்கொண்டு அருள நல்கும் மேன்மையுடைய திருவடி. வானளாவிய ஊர்த்துவதாண்டவம் புரியும் திருவடி எனினும் பொருந்தும். உனக்கே உறுமெமக்கும் ஏனோர்க்கும் தங்கோன்=உன்னிடத்தே கசியும் எமக்கும் பிறர்க்கும் பேரரசன்.

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர் உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான், சின் னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப் பாய் தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய், என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ் சொன் னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதி யோ, வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால் என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். ௭

(௭) பல அமரர் உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான். தென்னா வென்னா முன்னந் தீசேர்மெழுகொப்பாய் = தென்னாடுடைய சிவனே என்று சொல்லா முன்னரே தீயை யணுகிய மெழுகுபோல் உருகும் மனத்தாளே. என்னானை = என்னையுடையானை.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு மேழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்குங், கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை கேழில் விழுப்பொருள்கள் பாடினோங்கேட்டிலையோ, வாழியீ தென்ன வுறக்கமோ வாய் திறவாய் ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ, ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். ௮

(௮) கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும் = சேவல் கூவுதலும் மற்றைப் புள்ளினங்கள் கூவும். ஏழில் இயம்ப = டமா வாத்தியம் முழங்க (சரி கம பதநி என்ற ஏழிசை முழங்க என் என்பாரு முளர்). கேழில் = உரிமை வண்ணங் காட்டாத, நிறமில்லாத (ஒப்பில்லாத என்று பொருள் கோடலு முண்டு.) ஆழியான் = ஆஞ்ஞா சக்கரத்தையுடைய அறக்கடலாகிய சிவபெருமான் (மகாவிஷ்ணு என்பாருமுளர்). இந்த எட்டுப்பாடல்களோடு துயிலெழுப்புதல் முடிந்து விடுகிறது. மேல் வரும் பாடல்கள் நவசத்திகள் ஒருங்கு கூடி இறைவனை வழுத்துவனவாகின்றன.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே, உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம் உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம், அன்னவரே யெங்கணவ ராவார் அவருகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம், இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல் என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். ௯

(௯) "முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே," சீர்திருத்தக்காரர்கள் எனக் கூறிக் கொள்வோர் இவ்வடிகளை அடிக்கடி மேற்கோளாகக் கொள்வது வழக்கம். பழைமை வாதிகள் இதற்கு ஒவ்வார். "உன்னைப் பிரானாக..........
....................எம்பாவாய்" - இந்த ஆறு அடிகளிலும் அடியார் வணக்கம் கூறப்பட்டது. "செம்மலர் நோன்றாள்" என்ற சிவஞானபோத இறுதிச் சூத்திரத்தோடு இதை ஒப்பிட்டு உணர்க. இவ்வடிகளில் வரும் "ஏகாரங்கள் தேற்றத்தின்கண் வந்தமை நோக்கற்பாலது. அணுசதாசிவர், அஷ்டவித்யேசுவரர், சத்தகோடி மகா மந்திரேசுவரர் என்ற விஞ்ஞான கலர்க்கு "உன்னடியார்" என்பதைப் பொருத்தி, முறையே முதல்வர் தாள்பணிவோம், பின்னவர்க்குப் பாங்காவோம், இறுதிக்கண் வருவோர் எங்கணவராவார், அவர்கள் ஏவலால் அசுத்தமாயையைப் பிரேரித்து நிற்போம் என்று பொருள் கோடலு முண்டு. இவ்வாறே கீழ் வரும் பாடல் கட்கும் பொதுவாக உயிர்கள் மேல் வைத்தும் சிறப்பாக நவசத்திகளைச் சுட்டியும் இருவகையாகப் பொருள் கோடல் உண்டு.

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர் போதார் புனைமுடியு மெல்லாப் பொருள்முடிவே, பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன் வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும், ஓத வுலவா வொரு தோழன் தொண்டருளன் கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள், ஏதவனூ ரேதவன்பே ராருற்றா ராரயலார் ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். ௧௦

(௧௦) பேதை யொருபாற்றிருமேனி மங்கை பங்கன். ஓத உலவா = ஓத ஓதத் தம்மை விட்டு நீங்காத ஒரு

தோழன். தொண்டருளன் = ஒப்பற்ற தோழமையோடு தொண்டருள்ளத்தே நிலைத்திருப்பவன் (வாதவூரடிகட்கு முற்பட்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்ற கொள்கை யுடையோர் இந்த அடி சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குறிக்கிறது என்பர்). கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள் = நின்மலனாகிய சிவபெருமானை வழிபடும் குலத்தில் (சைவ நன்மரபில்) வந்த குற்றமற்ற பெண்களே (உயிர்வர்க்கங்களே). நவசத்திகளையே குறிப்பதாகப் பொருள் கோடலு முண்டு. மேலே கூறியபடி பொதுவாக ஆன்மாக்கள் மேல் வைத்தும் சிறப்பாக நவசத்திகளைச் சுட்டியும் இருவகையாகப் பொருள் கொள்வதும் அமையும். ஏது அவனைப் பாடும் பரிசு. (அவன் திருவடியைப் பாடும் பரிசு திருவடிப் பேறே-Virtue is its own reward என்ற கருத்தை ஒப்பிடுக.)

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக் கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி, ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல் போற் செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன், மையார் தடங்கண் மடந்தை மணவாளா ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின், உய்வார்கள் உய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம் எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். கக

(கக) முகேரென்ன = ஒலிக் குறிப்புச்சொல், தண்ணீரைக் கையினால் அடிக்கும்போது பிறக்கும் ஒலி. "ஐயா, நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்களுய்யும் வகை யெல்லாம் உய்ந்தொழிந்தோம் எய்யாமற் காப்பாய் = ஞானகுருவாகிய ஐயனே ! நீ உயிர்களை ஆட்கொண்டு அருளி அவையிற்றின் மலங்களைப் போக்கும் திருவிளையாட்டினால் முறையாகப் படிப்படியாக, விதிப்படி, மலங்களை அகற்றினேம், மீண்டும் அவை பொருந்தாமல் காப்பாய், உனது நிலைத்த திருவடிப் பேற்றினை நல்குவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந் தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங், கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங் காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி, வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள் ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப், பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம் ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். கஉ

(கஉ) ஆர்த்த பிறவி = ஆன்மாக்களை இறுகக்கட்டிய பிறவிப்பிணி, தீர்த்தன் = நின்மலனாகிய பரிசுத்தன், காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி = விளையாட்டைப்போல் முயற்சியின்றி சங்கல்ப மாத்திரையான் (நினைத்த வளவில்) சிருட்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்தொழிலும் புரிந்து, கரந்து என்பதனுள் சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் ஆகிய மூன்றும் அடங்கும். உடையான் பொற்பாதம் = உயிர்களாகிய அடிமைகளை உடைமையாகக் கொண்ட உடையான் திருவடி. இராமாநுஜாசாரியருக்கு உடையவர் என்ற பெயருண்மையை நோக்குக.)

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால் அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால், தங்கள் மலங்கழுவு வார் வந்து சார்தலினால் எங்கள் பிராட்டியும் எங் கோனும் போன்றிசைந்த, பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ் சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக், கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப் பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். கங

(கங) இப் பாட்டு பொய்கையை இறைவிக்கும் இறைவனுக்கும் ஒப்பிட்டுப் பலவகைப்பொருள்படக் கூறு

கின்றது. பைங்குவளைக்கார் மலரால்= பசுமையான கருநிறமுள்ள குவளைப் பூக்களினால் (இறைவியின் கண்களையும் இறைவன் திருமிடற்றையும் போன்றது "குவளைக்கண்ணிக் கூறன்" என்பது தேவாரம்.) செங்கமலப் பைம்போதால்=செந்தாமரைப் புட்பங்களினால் (இறைவியின் முகத்துக்கும் இறைவன் திருவடிக்கும் உவமை). அங்கு அம் குருகினத்தால் = ஆங்குள்ள அழகிய பறவைக் கூட்டங்களினால் (இறைவியின் வளையல்களுக்கும் இறைவன் அணியும் கொக்கிறகுகட்கும் உவமை—குருகு=வளையல் என்று ஒரு பொருள், பறவை, குருவி, புள் என்று மற்றொரு பொருள்). பின்னும் அரவத்தால் = மற்றும் ஒலிகளினால் (இறைவியின் மாலையின் மீதுள்ள கிளியின் பாட்டொலியால் இறைவிக்குப் பொருந்தும்)=பின்னிக் கொண்டுள்ள பாம்புகளால் (இறைவன் மீதுள்ள சர்ப்ப ஆபரணங்களால் இறைவனுக்குப் பொருந்தும்). தங்கள் மலங் கழுவுவார் வந்து சார்தலினால்=உடம்பைப்பற்றிய அழுக்கைக் கழுவுதற்கு குளத்திற்கு மக்கள் வருவதினால் (உயிரைப்பற்றிய மலத்தைக் கழுவுதற்கு உயிர்கள் அருட்சத்தியோடு பொருந்தியிருக்கும் இறைவன் திருவடியைச் சார்தலினால் கடவுளுக்கு உவமை.)

ஆகையால் கருங்குவளையும் செந்தாமரையும் அழகிய பறவைகளும் அவையிற்றின் ஒலியும் குளிக்க வரும் மக்களும் நிறைந்துள்ள "பொங்கு மடுவு" குவளைக் கண்ணியும் செந்தாமரை முகத்தாளும் அழகிய வளையலை யுடையாளும் பாடும் கிளிகளை யுடைய மாலை அணிந்தாளுமாகிய இறைவிக்கும், கருமிடறும் செங்கமலத் திருவடியும் கொக்கிறகும் சர்ப்ப ஆபரணங்களு முடைய இறைவனுக்கும், உயிர்கள் மலத்தைப் போக்கும் அவர்கள் திருவடிகட்கும் உவமையானதுபற்றி "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த பொங்கு மடுவு" என்றார்.

தீக்ஷாவிதியை யொட்டி மற்றொரு வகையில் உவமை கூறுவது முண்டு. சக்ஷு தீக்ஷை, ஸ்பரிசதீக்ஷை, வாசா தீக்ஷை (கண்ணினால் பார்த்தல், தொடுதல், வாயினால் சொல்லுதல் என்ற மூன்று முறைகள்—"திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால்" என்ற ஆன்றோர் வாக்கை நோக்குக) என்ற மூவகையும் ஈண்டு குறிக்கப்பட்டது. குவளை—கண்ணுக்குவமை திருநோக்கால் தீக்ஷை. செந்தாமரை—திருவடிக்குவமை பரிசத்தால் திருவடி தீக்ஷை. குருகினம் அரவம்— ஒலிக்குவமை திகழும் வாக்கால் ஞானோபதேசம் செய்தல். சிவஞான சாத்திரங்களுட் கூறியதுபோல இறைவனே மானைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல மானுடச் சட்டை தாங்கிவந்து ஞானாசிரியனாய் விளங்கி வாதவூரடிகள் முதலியோர் மலத்தைக் கழுவியதுபோல் அருளுவதால் அருளொடு கூடிய கடவுளுக்குப் பொங்கு மடுவு உவமையாயிற்று. அநுபூதிமான்கள் இப்பாடலுக்கும் திருவெம்பாவை முழுமைக்கும் வேறு பல குறிப்புரைகள் பகர்கின்றனர். அவை அநுபூதி யுடையார்க்கே விளங்கும்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்,
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி வேதப்
பொருள்பாடி யப்பொருளா மாபாடிச், சோதி
திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி ஆதி
திறம்பாடி யந்தமா மாபாடிப், பேதித்து நம்

மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். ௧௪

(௧௪) அப்பொருளா மாபாடி=அப்பொருள் ஆம் ஆறு பாடி. அந்தமா மாபாடி=அந்தம் ஆம் ஆறு பாடி, பேதித்துநம்மை வளர்த்தெடுத்தபெய்வளை=பிரபஞ்சத்தினின்றும் வேறுபடுத்திய திரோதான சத்தியாகிய வளையல்கள் நிறைந்த உமையம்மை.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான் சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர, நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப் பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள், பேரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும் ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள், வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். ௧௫

(௧௫) ஓரொரு கால் = ஒவ்வொரு காலத்தும், ("பொழுதறு காலத் தொன்றும் பூசனைவிடாது செய்து" என்ற வாக்கை நோக்குக) இடைவிடாது, சீரொருகால் வாயோவாள்= இறைவன் புகழைப்பாடுவதில் வாய் ஓயமாட்டாள். நெடுந்தாரை கண் பனிப்ப=காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, பித்து= கடவுள்மீது காதல்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள் என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின், மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற் பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம், என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு, முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். ௧௬

(௧௬) இப்பாட்டு மேகம் மழையைப் பொழிகின்ற நிகழ்ச்சியை அருட்சத்தி அருள்பாலிக்கு முறைமைக்கு ஒப்பிடுகின்றது. உடையாள் என்னத் திகழ்ந்து = இறைவியைப் போல் பசுமை அல்லது கருமை நிறமாகத் திகழ்ந்து, எம்மை யாளுடையாள் இட்டிடையின் மின்னி=இறைவியின் அணிகலனிட்ட இடையைப் போல் மின்னி. எம்பிராட்டி திருவடிமேற் பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி=இறைவியின் திருவடிகளிலுள்ள சிலம்பணியைப்போல் முழக்கம் (இடிமுழக்கம்) செய்து, திருப்புருவம் என்னச் சிலை குலவி=இறைவியின் புருவத்தைப்போல் வளைந்த வானவில்லை விளக்கி. இன்னருளே என்னப்பொழியாய்=இறைவி அருள் பொழிவதைப்போல் பெய்வாய். "நல்லார் ஒருவர்உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யு மழை." அஃதே போல் அருளும் இடைவிடாது மக்களிடை பொழியப்படுகிறது. மழையைப் பக்குவ முடையோரே செம்மையாகப் பயன்படுத்துவர். அஃதே போல் "நின் கருணைப் பிரவாக அருளைத்தாக மாகநாடின"ர்க்கே அது பயன்படும். ஏனையோர் நிலை "வெள்ளத்துள் நாவற்றி எங்கும் விடிந்து இருளாம், கள்ளத்தலைவர் கடன்" என்ற திருவருட்பயன் செய்யுளால் விளங்கும்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால் எங்கும் இலாததோர் இன்பநம் பாலதாக், கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி இங்குநம் மில்லங்கள் தோறும் எழுந்தருளிச், செங்கமலப் பொற்பாதந்தந்தரு ளுஞ் சேவகனை அங்கண் அரசை அடியோங் கட் காரமுதை, நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப் பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடே லோ ரெம்பாவாய். ௧௭

(௧௭) செங்கண் அவன்...........நம்பாலதா=மாலயன் முதலாய தேவர்கள் நுகரும் இன்பத்தினும் பெரிதாகிய திருவடிப் பேற்றினை நமக்கு, கோதாட்டி=பாராட்டி அங்கண் அர

சை = கிருபா நோக்கமுடைய கண்களை யுடைய இறைவனே.

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றி றைஞ்சும் விண்ணோர் முடியின் மணித்தொ கைவீ றற்றாற்போல், கண்ணா ரிரவி கதிர் வந்து கார்கரப்பத் தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப், பெண்ணாகி யாணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண் ணாகி யித்தனையும் வேறாகிக், கண்ணாரமுத முமாய் நின்றான் கழல்பாடிப் பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். கஅ

(கஅ) இப்பாட்டு சூரியன் உதய மாகலும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஒளிமழுங்கி நிற்கும் நிலைக்கும் இறை வன் திருவடி ஒளியின்முன் விண்ணோர் கள் திருமுடி ஒளிகள் மழுங்கி நிற்ற லுக்கும் உவமை கூறுகின்றது. ஆன் மாக்கள் அடைகின்ற திருவடிப்பேற் றின் உண்மை நிலையை விளக்கும்

"ஆதவன்தன் சந்நிதியில்
அம்புலியின் ஆர் சோதி
பேதமற நிற்கின்ற
பெற்றி போல்—நாதாந்தத்து
அண்ணல் திருவடியில் ஆன்மா
அணைந்து இன்பக்
கண்ணில் அழுந்தி யிடுங்காண்"

என்ற "உண்மை விளக்கச்" செய்யுளை இதோடு ஒத்து நோக்குக.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கல மென் றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச் சத்தால், எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள் எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க, எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க கங்குல் பகலெங் கண் மற்றொன்றுங் காணற்க, இங்கிப் பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல் எங்கெழி லென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய். கக

(கக) உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று அங்கு அப்பழம் சொல் புதுக்கும் எம் அச்சத்தால்— முன்னொருகால் அகலிகை சிவபெரு மான் மீது காதல் கொள்ள அவர் அவள் மலரணையின் மீது அமர்ந்த வுடன் ஒரு குழந்தை தோன்ற, பயந்து அவரிடமே அந்தக் குழந்தையைக் கொடுத்து "உங்கையிற் பிள்ளை உனக் கே அடைக்கலம்" என்றாள். அவ் வாறு அப்பழஞ் சொல்லை எங்கே புதுப்பிக்க நேரிடுமோ என்ற பயத் தினால் என்பது இதன் பொருள். இப் பாட்டின் கருத்தை "முன்னைப்பழம் பொருட்கு" என்ற பாட்டோடு ஒப் பிடுக. இப்பாட்டிலும் அடியார் வணக் கம் கூறப்பட்டுள்ளது. இங்கு இப் பரிசே.. நல் குதியேல் = பிறவிப் பெரும்பயன் அதுவே யாகையால் - 'மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன்' என்ற பெரிய புராணச் செய்யுளோடு ஒப்பிடுக. எங்கெழில் என் ஞாயிறு எமக்கு = சூரியன் கிழக்கேயோ வேறு எத்திசையிலோ உதித்தால் தான் எமக்கு என்ன. சிவன் முத்தர்கள் காலதத்துவம் கடந்தவர்கள்.

போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர் போற்றி யருளுகநின் அந்தமாஞ் செந்தளிர் கள், போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம் போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள், போற்றியெல் லாவு யிர்க்கும் ஈறாம் இணையடிகள் போற்றிமா லுன்முகனுங் காணாத புண்டரிகம், போற்றி யாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர் கள் போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம் பாவாய். உ0

(உ0) சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபாகிய திருவடிப் பேற்றின் சிறப் பையும் அத்திருவடியின் பெருமை யையும் வலியுறுத்துவது இப்பாட்டு. முதல் இரண்டு அடிகளிலும் ஆதி அந்தம் என்று கூறி, பிறகு ஐந்து அடிகளில் திருவைந் தொழில்களைக் கூறி, இறுதியில் இறைவனை வணங்கி

மார்கழி நீராடுதலைக் கூறுகின்றது. ஒவ்வொரு அடியிலும் இறைவன் திருவடிகளைக் குறித்திருப்பது நோக்கத் தக்கது. எல்லா வுயிர்க்கும் தோற்றம், எல்லா வுயிர்க்கும் போகம், எல்லா வுயிர்க்கும் ஈறு என்று மும்முறை "எல்லா வுயிர்க்கும்" என்பதை வலியுறுத்தி யிருப்பதை ஆழ்ந்து நோக்குக. விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் என்ற மூவகை உயிர்களையும் செத்து செத்துப் பிறக்கின்ற தேவ வர்க்கம் அனைத்தையும் "எல்லா வுயிர்க்கும்" என்பது குறிக்கும் என நன்குணர்க.

இத்தகைய செம்பொருள்கள் அடங்கிய மாணிக்கச் சுரங்கத்தை நம் தமிழ் நாட்டுக்கு நல்கிய வள்ளல் மாணிக்க வாசக சுவாமிகளாவார். இப்பதிகத்தைத் தினந்தோறும் ஓதியுணர்தல் சிறந்த வொழுக்கத்தில் இருத்தும். இயலாதவர்கள் மார்கழியீ முழுமையும் இன்றேல் திருவாதிரைக்கு முன் பத்து நாட்களேனும் ஓதுதல் முறையாகும். இவ்வுலக வருஷம் தேவர்கட்கு ஒருநாள் என்றும் மார்கழியீ தேவர்கட்கு விடியற்கால மென்றும் கொண்டு, விடியற் காலத்தைச் சிருட்டிக்கு ஒப்பிட்டு, அந்த சிருட்டி தத்துவத்தைக் கூறும் இப்பதிகத்தை மார்கழிமாதம்விடியற்காலத்தில் ஓதவேண்டுமென்று பண்டையோர் வகுத்தனர்.

வைணவ சம்பிரதாயத்தில் ஆண்டாள் திருப்பாவை என்ற பதிகத்தை வைகுண்ட ஏகாதசியை ஒட்டிப் பத்து நாட்கள் காலையில் ஓதுவது வழக்கமாயிருக்கிறது. ஆண்டாள் திருப்பாவையையும் திருவெம்பாவையையும் ஒருங்கு சேர்த்து வாசித்து உணர்வது சமரச நன்னோக்க முடையார் நற்செயலாகும்.

அரிய வாக்குக்களில் செம்பொருள்கள் காணப் பொருத "ஆராய்ச்சிப் புலிகள்" திருவெம்பாவையை சாதாரணமாக அகத்துறையில் பாடப்பட்ட "பாவைப் பாட்டு" என்னும் இனத்தைச் சேர்ந்த பாட்டாகக் கொள்ளும். எனினும் மேற்கூறிய செம்பொருள்கள் இப்பாட்டில் உள்ளன என்பதை அப்புலிகள் மறுக்க இயலா.

இதைக் கண்ணுறும் ஒவ்வொரு சைவரும் இவ்வாண்டு மார்கழிமாதத்தைக் "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே" விடியற்காலையில் திருவெம்பாவையை ஓதிப் பொருளுணர்ந்து எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப்பெறுமாறு எந்தை யீசன் திருவடிகளை எழுமுறை வழுத்துகின்றோம்.

குறிப்பு:—ஆறுமுக நாவலர் சீடருள் ஒருவரும் "சித்தாந்த பானு" என்போருமாகிய திருமயிலை மகாவித்வான் தணிகாசல முதலியார் எமது அருமைத் தந்தையாருக்குப் பாடமாகச் சொல்லிய குறிப்புகள் சிலவற்றின் உதவியைக் கொண்டு இக்கட்டுரை எழுதப் பட்டது. —பத்திராசிரியர்.

பிரிவாற்றுமை

நமது சமாஜ போஷகருள் ஒருவராகிய சைவத்திருவாளர் மேடை தளவாய் திருமலையப்ப முதலியார் அவர்கள் 22-11-1930 மாலை 6 மணிக்கு சிவபத மடைந்தனர். நமது பிரிவாற்றுமையை இதன் மூலம் அறிவிக்கிறோம்.—காரியதரிசி.

சிவஞானபோத விளக்கம்

[கி. குப்புச்சாமி முதலியார், உதவிப் பத்திராசிரியர்]

ஐந்தாம் சூத்திரம்

மேலே நான்காம் சூத்திரத்தின் பொருளினை யுணர்ந்த மாணுக்கன், ஆன்மாவானது ஐந்து அவத்தைப் படுகின்ற காலத்து, கரணங்களாகிய கருவியும், உயிரும் அமைச்சுப்போலும் அரசு போலும் பொருந்தி யிருக்கின்றன. அவ்விதம் பொருந்தியது போதுமானதாக இருக்க, முதல்வன் என்னும் இறைவனால் உயிர்க்கு ஆகவேண்டியது யாது உளது? என்னலும், அவ்விதம் கரணங்களும் உயிரும் பொருந்தி யிருக்கினும் முதல்வனது உதவி யில்லாது யாதொன்றும் அமையாது என்று அறிவிக்க வந்தவர், இரண்டாஞ் சூத்திரத்துக் கூறிய துணைக்காரணம் முதற் காரணங்களாகிய கன்மம் மாயைகளினது இலக்கணத்தை உணர்த்த ஆரம்பிக்கின்றார். அதாவது,

"விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண்மூக்
கனந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்த முணர்வின் றமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே"

என்பதாம்.

இதன் பொருளாவது, விளம்பிய உள்ளத்து - முன் கூறிய உயிராலே, மெய் வாய் கண் மூக்கு - மெய் வாய் கண் மூக்கு செவி என்பன, அளந்து அறிந்து அறியா - தத்தம் விடயங்களை இது இன்னதென்று அளவிட்டு அறிந்தும் அவ்விதம் அறியும் தம்மையும், தம்மைச் சேர்ந்து நின்று செலுத்தும் அவ்வுயிரையும் அறியமாட்டா, ஆங்கு அவைபோல - அவ்விதம் தம்மையும், தம் முதலாகிய உயிரையும் அறியமாட்டாத இந்திரியங்கள்போல, தாம் தம் உணர்வின் தமியருள் - உயிர்களாகிய தாமும் தமது அறிவிற்கு விளக்கமாகிய முதல்வனது சிற்சத்தியால் மேற்கூறிய ஐந்து அவத்தைகளில் நின்று வினையின் பயன்களை அறிந்து அநுபவிக்கின்ற தம்மையும் தம்மைச் செலுத்தி நிற்குந் திருவருளையும் அறிய மாட்டாவாம். காந்தங்கண்ட பசாசத்தவையே - ஆதலின் உயிர்கள் அவ்வாறு உணர்தல் காந்தத்தைக்கண்ட இரும்பு ஒன்று அதன் சன்னிதி மாத்திரையில் வலித்துக் கொள்ளப்படுவதுபோல, கரணத்தாலல்லாது சங்கற்பத்தால் அதிட்டிக்கும் முதல்வன் சன்னிதி மாத்திரையில் உண்டாகும். ஆதலால் இவ்விதஞ் செய்யும் இறைவன் விகாரப்படுவானல்லன் என்பதாம்.

ஆயின் இவ்விதம் ஐயுணர்வுகள் ஆன்மாவால்தான் உணரும் என்பது எவ்விதம் எனின், ஐம்பொறிகளோடும் உயிர் ஒற்றுமைப்பட்டு நின்று அறிந்தாலல்லாமல் அவை ஒரு விடயத்தையும் விடயிக்க மாட்டா. அது எவ்விதமோ வெனின்,

"ஐம்பொறியை யாண்டங் கரசாயுள நிற்ப
வைம்பொறி களுள்ள மறியாவா—மைம் [பொறியிற்
காணுதேற் காணு தகாணுமுளங் காணுதேற்
காணுகண் கேளா செவி"

என்னும் வெண்பாவால் அறியற்பாலதாம். இதன் பொருளாவது அரசனொருவன் சிங்காதனத்திலிருந்து தன் கீழுள்ள வேலைக்காரர்களை அவரவர்

செய்யவேண்டிய காரியங்களில் செலுத்தி ஆள்வதுபோல, உயிர் ஐம்பொறிகளையுமிஐந்தவத்தைக்குரியவிடயங்களில் செலுத்தி இலாடத்தானம் என்கின்ற இடத்தில் நிற்றலால் அரசனால் ஏவப்பட்ட வேலைக்காரர்கள் தமக்கு இட்ட தொழிலையன்றி வேறொன்றுஞ் செய்தற்கில்லாததுபோல் ஐம்பொறிகளும் தம் தொழிலையன்றி உயிரை யறியமாட்டா. அவ்விதமாயின், ஐம்பொறிகள் உயிரையன்றி ஒருபொருளையும் அறிவதற்கில்லை என்பது அமையுமாயின், உயிர் ஐம்பொறிகளல்லாது பொருள்களைக் காணுதல் கூடுமோ எனின், ஒரு கருமத்தைச் செய்யுமிடத்து அரசனும் அவன் அமைச்சர் முதலாயினோரும், ஒன்று சேர்ந்தாலல்லது கருமம் முடியாததுபோல, ஒரு பொருளை யுணருங்காலத்து உயிரும் ஐம்பொறிகளும் ஒன்றுசேர்ந்து உணர்தல் வேண்டுமேயன்றி உயிரையன்றிப் புலன்கள் ஒன்றையும் உணரா; புலன்களையன்றி உயிர் ஒன்றையும் உணராது என்பதாம்.

இதுகேட்ட மற்றோர் வாதி ஐம்பொறிகள் தாம் ஜடமாதலால், சித்தாகிய உயிராலல்லது எதையு மறிவதற்கில்லை. ஆனால் சித்தாகிய உயிர் இறைவனாகிய முதல்வனது உபகாரத்தை எதற்கு விரும்புதல் வேண்டும்? இவ்விதம் சித்துப்பொருளாகிய உயிர் முதல்வனது உபகாரத்தை விரும்புதல் போல் முதல்வனும் மற்றொன்றனுடைய உபகாரத்தைவிரும்புதல் வேண்டும் போலும்" என்னலும், அதை விளக்கிக் காட்டுவார், "அறிஞனே! இவ்வான்மாவானது தன்னாலே பொருள்களை யறியும் இந்திரியங்களைப்போலத் தானும் தன்னையுணராது நிற்குந் தன்மை யுடையது. ஜடமாகிய இந்திரியங்களும் சேதனமாகிய உயிரும் ஜடம் சேதனம் என்கின்ற தன்மையில் வேறுபட்டு நிற்கினும், தமது முதலை யறிகின்ற தகுதியில் இரண்டும் ஒன்றாக நிற்பதால் இந்திரியங்களும் உயிரும் இரண்டும் அத்தகுதியில் ஒத்தனவேயாகும் என்றனர். ஆனால் அவ்விதம் ஒத்து நிற்குமாயின் இந்திரியங்களுக்கு வரும் பயனை அவற்றோடு ஒன்றுசேர்ந்து காணும் உயிர் அடைவதுபோல, உயிர்க்குவரும் இன்ப துன்பமாகிய பயனையும் உயிரோடு ஒன்று சேர்த்துக் காணும் முதல்வனுக்கும் ஆதல்வேண்டுமென்று கூறுவாரை நோக்கி, அவ்விதம் ஆகாது என்பார்,

> "மன்னுசிவன் சன்னிதியின்
> மற்றுலகஞ் சேட்டித்த,
> தென்னுமறை யினியன்
> மறந்தாய்—சொன்னசிவன்
> கண்ணுவுளம் வினையாற்
> கண்டறிந்து நிற்குங்கா
> ணெண்ணுன் சிவனசத்தை
> யின்று"

என்னும் வெண்பாவை யருளுவாராயினர். இதன் பொருளாவது அறிவிலாதவனே! உனக்குக் கூறிய கருதலளவை யென்னும் அனுமான அளவையால் முதல்வன் ஒருவன் உண்டு; அவன் சன்னிதியில் உலகம் செயற்படுகின்றது என்று வேதமுங் கூறுகின்றது என்பதை மறந்து மயங்குகின்றாய். உயிரானது அவ்வேதத்துள் எடுத்துக் கூறும் முதல்வன் தனக்குக் காட்டாகி நிற்கவும் தான் செய்த வினைக்கீடாக ஒன்றனை யறிந்துநிற்கும். ஆயின் இந்திரியங்களோ தமக்கென்று ஒன்றுமில்லை ஆயின. ஆதலால் இவ்வேறுபாட்டினையறிவார் அவ்விதங் காட்டாகி நிற்கின்ற சிவன் தன் சன்னிதியில் அசத்தெல்லாம் சூனியமாதலால் அவ்

வுயிர் போல் பயன் அநுபவியான் என் பதை யறிவர் என்பதாம்.

அதுகேட்ட வாதியானவன் அவ்வி தம் இறைவன் உணர்த்த உயிர் உணரு மிடத்து, உணர்த்துகின்ற இறைவனை வேறாக நின்று உணருமோ, ஒன்றாய் நின்று உணருமோ என்னலும், அவ்விர ண்டு தன்மையும் அல்லாது நின்று உணர்வதை யுணர்த்துவார்,

" வெய்யோ னொளியி
லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத
மீன்போல—மெய்யவனிற்
கண்டுகேட் டுண்டுயிர்த்
துற்றறியுமைம் புலனைக்
கண்டடனாய் மன்னுதலைக்
காண் "

என்று கூறினர். இதன் பொருளாவது: சூரியனது ஒளியிலடங்கி அதற்கு வேறாய்த் தோன்றுதலில்லாமல் அச் சூரியனும் ஆகாது நின்ற நட்சத்திரங் கள் அச்சூரியனாலேயே ஒளிகொண்டு நிற்பதுபோல், கண்டுங் கேட்டும் உண் டும் உயிர்த்தும் தீண்டியும் அறியப் படும் ஐந்துவிதமாகிய விடயங்களையும் உயிரானது உண்மைப் பொருளாகிய இறைவனால் உணர்ந்து அவ்விறைவ னுக்கு வேறாதலும் ஒன்றாதலும் இல் லாமல் உடனாய் நிலைத்தலை யறிவாயாக என்பதாம். அவ்விதம் இறைவனால் உணரும் உயிர்கட்கு ஒருயிர்க்கு ஒரு விதமும் மற்றோர் உயிர்க்கு மற்றோர் விதமுமாகப் பலவேறு வகைப்பட்டு உணர்வு உண்டாதலால், இவ்வுணர்த்து கின்ற வேறுபாட்டால் ஆயிற்று எனல் வேண்டும். அவ்விதம் வேறுபடுமாயின் முதல்வன் நிருவிகாரி என்னும் வேத வாக்கியத்தோடு முரண்பட்டு விகாரப் படுபவன் என்னுந் தன்மைக்கு உரிய னாவான் என்று கூறலும், அவன் ஒரு காலும் விகாரப்படுதலில்லை என்பதை யுணர்த்துவார்,

" அருளுண்டா மீசற்கது சத்தியன்றே
யருளு மவனன்றியில்லை—யருளின்
றவனன்றே யில்லை யருட்கண்ணார் கண்
கிரவிபோனிற்கு மானேய்ந்து" [ணுக்

என்னும் வெண்பாவை யருளினர். இதன் பொருளாவது, "வாதியே! உயிர்கட்குப் பசுத்துவம் என்னுந் தன் மையை நீக்கிச் சிவத்துவத்தை விளக் குவதற்குரிய இரக்கமானது முதல் வனுக்கு அநாதியாகவே உள்ளது அவ் விரக்கமோ வேறு பொருளல்ல; அது அம்முதல்வனுக்கு உள்ளதாகிய சத்தி யே யாகும். இவ்விரக்கமும் அவனும் குணமும் குணியும் போலிருத்தலால் அவ்வருளும் முதல்வனோடுஇருத்தலல் லாமல் வேறு இருத்தல் கூடாது. முதல் வனும் அவ்வருளோடு கூடி நில்லாது வேறு இருத்தற்கில்லை. ஆனால் இவ் வுண்மை யெல்லாம் ஞானக் கண் ணுடையராகிய பெரியோர் அறிதல் கூடும். சூரியன் தன்னொளியோடு எவ்விதம் ஒன்றுசேர்ந்து நிற்கின் றானோ அதுபோல் முதல்வன் அருட் சத்தியோடு ஒன்றுபட்டு நிற்பன். ஆதலால் எண்குணங்களில் தன் வயத்தனாகும் குணமுடைய அம் முதல்வன் அவ்வவ்வுயிர்க்கு உரிய உணர்ச்சியை யாதொரு விகாரமு மில் லாமல் தனது சத்தியைக்கொண்டு நினைத்த மாத்திரத்தில் செய்வன் என்பதாம். இதெல்லாம் சித்தாந்த நெறி யுணர்ந்தவர்க்கல்லது வேறொரு வருக்கும் விளங்காது என்று கூறி இச் சூத்திரத்தால் முன்னர் இரண்டாவது சூத்திரத்தில் கூறிய பாசத்திற்கு இலக்கணங் கூறினர். ஆதலால் இச் சூத்திரம் பாச விலக்கணமாயிற்று.

இதனுல் சூத்திரத்தின்இயைபு இனிது விளங்கும்.

ஐந்தாஞ் சூத்திரம் முடிந்தது

குறிப்பு :—இச் சூத்திரத்துக்குத் தெளி பொருள்விளக்க வேதாந்தியார் பதவுரை எழுதுங்காலத்து, 'விளம்பிய வுள்ளத்து' என்பதற்கு, 'முன்னர்க் கூறிய சிதாபாசவடிவ சீவர்களால்' என்றும், 'தாந்தம் உணர்வில் தமியருள்' என்பதற்கு 'தமக்கு அதிஷ்டானமாய் ஏகமாயுள்ள சிவத்தின் சந்நிதானத்தால் (தத்தமக்குரிய விஷயங்களை இஃதித் தன்மையதென்று அளவிட்டுச் செவ்வையாக அறிந்து வருகின்றனவே யன்றித் தாமே சுதந்திரமாக) அறிவதில்லையாம் என்றும் கூறியிருக்கின்றனர். சூத்திரத்தின் முடிபுரை கூறுகின்ற காலத்து,

"சீவனென்னச் சிவனென்ன வேறில்லை
சீவனர் சிவனுரை அறிகிலார்
சீவனர் சிவனுரை யறிந்தபின்
சீவனர் சிவனுயிட்டிருப்பரே."

"சிவன்ருன் பலட்ல சீவனுமாகி
நவின்ருனுலகுறு நம்பனுமாமே"

என்னும் பாக்களைக் கூறுகின்றனர். நல்வினை யின்மையால் மயக்க அறிவு கொண்டு தாம் மயங்குவது அன்றித் தம் வழிப்பட்டோரையும் மயக்குகின்றனர்.

நினைப்பற நினைத்தல்

[இருக்கம் - ஆதிமூல முதலியார்]

'இன்றெனக் கருளியிருள் கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்
தொன்ருந்திருப் பெருந்துறையுறை
[சிவனே
யொன்று நீயல்லையன்றி யொன்றில்லை
யாருன்னை யறிய கிற்பாரே."

என்னும் இத்திருவாசகச் செய்யுளினுலும், "சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்" என்பது முதலான ஆப்த வாக்கியங்களாலும் நினைப்பற நினைதலாகிய ஒரு நினைவு உண்டெனத் துணியப்படும். நினைப்பற நினைதல் எனவே, நினைப்பரு நினைவும் ஒன்று உண்டென்பதுந் துணியப்படும். இவற்றுள் நினைப்பற நினைத்தலாவது, மனதை ஐம்புலன் வழிச்செல்லா தடக்கி அருள் வசப்படுத்தி ஒரு கணமும் மறவாது இறைவனை யிடையறுது நினைத்தலாம். நினைப்பறுது நினைத்தல் என்பது, மனதை ஐம்புலன் வழிச் செல்லவிட்டு ஆசை வசப்பட்டுப் பொருளல்லவற்றைப் பொருளென மருண்டு அவற்றை மறந்து மறந்து நினைத்தலாம்.

"அம்பலக் கூத்தினைத் தினைத்துணைப் பொழுதும் மறந்துய் வனே," "பழனஞ் சேரப்பனை யென்கண் பொருந்தும் போழ்தத்தும் கைவிட நான் கடவேனே," "அப்போது மலர் தூவி யைம்புலனு மகத்தடக்கி - எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே" என்னும் வேத வசனங்களால் நினைப்பற நினைதலின் இலக்கணம் இத்தன்மைத் தென அறியலாகும். நினைப்பறுது நினைத்தலின் இலக்கணத்தை யோசித்தால், அது

பொய் நினைவென்பதும், அதை நினைக்கும் நெஞ்சம் பொய் நெஞ்சம் என்பதும், அப்பொய் நெஞ்சால் செய்யப்படும் அன்பும் பொய்யன் பென்பதும் புலப்படும். இதனை,

“யானேபொய் யென்னெஞ்சும் பொய்
யென் னன்பும்பொய்
யானால் வினையே னழுதா
லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின்
றெளிவே தித்திக்கு
மானே யருளாயடி யேனுனை
வந்துறு மாறே”

என்னும் திருவாசகம் வலியுறுத்தும். இறைவன் தன்னை ஒரு கணமும் மறவாது சுட்டிறந்த உணர்வினால் உணர்ந்து இடையறாது நினைக்கும் சீவன் முத்தர் மனதையே கோயிலாகக் கொண்டு வீற்றிருப்பதனால் அவர்களுக்கு நாட்களும் கோட்களும் மிக நல்லனவாம். ஐம்பெரும் பூதங்களும் அவர்கள் ஏவல் வழிநிற்கும். அவர்களுக்கு எந்நாளும் இன்பமேயன்றித் துன்பம் உண்டாதலில்லை. இது நமது சமயகுரவர் சரித்திரங்களால் நன்குணரலாகும். எம்போல்வார் இறைவனைப் பல காலம் நினைந்தும் வாழ்த்தியும் வணங்கியும் வழிபட்டாலும் எங்கள் மனம் பொய் மனமும், எங்கள் வாழ்த்தும் வணக்கமும் பொய் வாழ்த்தும் பொய் வணக்கமுமா யிருத்தலினால், இறைவன் எங்கள் மனதைக் கோயிலாகக் கொள்ளமாட்டான். ஆதலால் நாங்கள் நாட்களாலும் கோட்களாலும் நலிவுறுகின்றோம். நமக்கு இன்பம் அணுவளவாகவும் இடர் மலையளவாகவும் இருக்கின்றன. இறைவன் எங்கள் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாமல் வாக்குமனாதீதனா யிருக்கிறான். ஆதலால் நாம் அவனுடைய சச்சிதானந்த வடிவத்தை நினைக்கவும் வாழ்த்தவும் வணங்கவும் மாட்டாதவர்களாம். அவனுக்கு ஆலயங்களைச் சமைத்து அதில் அவனுடைய அருள் வடிவங்களைப் பிரதிட்டை செய்து பூசிப்பது நம் கடமையாயிற்று. இவ்வுண்மையை வற்புறுத்தவே நமது வாகீசப் பெருமானார்,

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சேநீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன் முன்னலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை யெம்மாதியென்
ஆரூராயென்றென்றேயலறாநில்லே. [றும்

என்றுகட்டளையிட்டருளினர். இதற்கு மாறாக இக்காலத்தவர் சிலர் தாங்கள் கடவுளை (அதாவது மனம் வாக்குக் காயங்களுக்கு எட்டாமற் கடந்திருப்பவரை)த் தங்கள் மனதைக் கொண்டு பூசிப்பதில் வல்லவர்களென மதித்துக் கொண்டும் ஆலயங்களின் மீது குறைகளைக் கூறிக்கொண்டும் ஆலய வழிபாட்டைத் தாங்கள் தவிர்த்திருப்பதோடமையாமல், பிறரும் ஆலய வழிபாட்டை யருவருக்குமாறு உபதேசித்துக் கொண்டும் இருக்கிறார்கள். இவர்களுள் சைவரெனப் படுவோரும் சிலர் உளர். ஆலயங்களில் ஏதேனும் குறைகள் நேருமாயின் அவற்றை நியாய வரம்பு கடவாமல் அகற்றுதல் இவர்கள் கடமையாகும். அப்படிச் செய்ய இயலாவிடில் வாளாவிருத்தலே நன்று. அப்படியும் இராமல் ஆலயங்களைப் பழித்துக்கொண் டிருத்தல் தருமமன்று.

கார்த்திகை

[கருவூலத்தான் எழுதியது]

கார்த்திகை நாளில் கருவூலத்தின் (Library) கதவுகளைத் திறந்து நூல் பல ஆய்ந்தேன். "கற்றவர் கருத்தில் ஓர் கண்ணுண்டு" என்ற திருமந்திரப் பாடல் கண்டு அதன் பதங்கள் ஒவ்வொன்றின் மேலும் உற்று நோக்கினேன். கற்றவர் எக்கருத்து கொண்டு கார்த்திகை நாள் நிறுவினர் என்று அவர்களது கருத்துக் கண் மேல் என் கருத்து திரும்பியது. நூற்களில் கார்த்திகைபற்றிச் சில குறிப்புகளைத் தொகுத்து படிமுறையில் மனதில் வகுத்தேன். ஆனால் வெளியிட வருந்தினேன். இன்று தோன்றியதெனினும் தீதாக நினையாது, புதுமைக்கும் புதுமை கொண்டு, பழமை யழகாய்த்தலை நயந்திடும் நடுவாந் தன்மையினர் விழுமிய கருத்தாதலால் கிடைத்த கருத்துக்களையும் எழுதலானேன்.

எழுவாயில் கார்த்திகை மீன்மேல் மனம் சென்றது. அதற்கு எரிபிறந்திடு நாள், ஆரல், இறால், அறுவாய் அளக்கர் முதலிய பதங்கள் உரித்தாக நிகண்டில் கண்டேன்.

பிறகு வடிவம் குறித்துத் தேடினேன். "எத்திய தீபம் போல ஆறு உடுக்கள் கூட்டமாக விருக்கும். இது பற்றி இஃது அறுமீன் எனவும் பெயர் பெறும். இவற்றுள் ஒன்று மற்றையவற்றினும் ஒளி மிகுந்திருக்கும்; இஃது Alegorr எனப் பெயர் பெறும் சூரியன் கார்த்திகையைக் கிட்டும் போழ்து அக்கினி மீன் பிறக்கும். இந்த ஆறு உடுக்களின் கூட்டம் Pleiades என மேற்றிசைப் புலவராற் கூறப்படும்." என்னும் மற்றும் மலைபடு கடாத்தில் (100-101) "அகலிரு விசும்பினால் போல, வாலிதின் விரிந்த புன் கொடி முசுண்டை" என்ற வரிகட்கு "ஏனைப் பூதங்கள் தோன்றுதற்குக் காரணமான பெரிய ஆகாயத்தின் கார்த்திகையாகிய மீன் போல வெள்ளிதாக மலர்ந்தன" என்று நாவலர் நச்சும் நச்சினார்க்கினியன் உரையும் கிடைத்தது. இம் மீன் ஏனையவற்றிற்கு முதன்மை இடம் பெற்று வழங்கி வந்தது பற்றி மணிமேகலையில் குறிப்பு கிடைத்தது வருமாறு :—

"தொருபதின் மேலுமொரு மூன்று சென்ற
மீனத் திடைநிலை மீனத் தகவையிற் [பின்
போதித் தலைவனொடு பொருந்தித்தோன்றும்"
பாத்திரம் பெற்ற காதை. (41-43)

உரைப்பகுதி :— "நட்சத்திரங்களுள் நடுவில் நிற்றலை யுடையதான விசாக நட்சத்திரத்தில் * * * * * அச்சுவினி முதலிய இருபத்தேழனுள் பதினான்காவதும் நடுவிலுள்ளதுமாகிய நட்சத்திரம் சித்திரையாக இருக்க, அதனை நடுவிலுள்ளதாகக் கூறாமல் இவ்விடத்தில் விசாகத்தைக் கூறியது என்னையோவெனின், ஒவ்வொரு வருடத்தும் பகலையும் இரவையும் சமனாக முப்பது முப்பது நாழிகையாகவே பெற்ற இரண்டு விஷுவத் தினங்களுள் ஒன்றாகிய மேஷாயனத்திற் சூரியனுக்கு எந்த நட்சத்திரத்திற் பிரவேசமுண்டாகிறதோ அதை நட்சத்திரங்களில் முதலாவதாகக் கூறுவது சோதிட நூற்றுணிபாதலாலும் முன்னொரு காலத்திற் சூரியனுக்குக் கிருத்திகாப் பிரவேச மிருந்தபொழுது

மேஷாயனம் நேரிட்டதென்றும் அது பற்றி கார்த்திகையை முதலாகக்கொண்டு நட்சத்திரங்களை எண்ணி வந்தார்களென்றும் பழைய சோதிட நூற்களால் தெரிகின்றமையாலும் நட்சத்திரங்களின் நடுவிலுள்ளதை விசாகமென்று கூறியது குற்றமன்றென்க. இப்படியே முன்னொரு காலத்தில் நட்சத்திரங்களைக் கார்த்திகை முதலாக எண்ணிவந்தார்களென்பது, கிருஷ்ணயஜுர்வேத ஸம்ஹிதையாலும் கிருஷ்ணயஜுர் வேத பிராஹ்மணத்தாலும் தெரிகின்றதென்பர். உச்சியின் நகரத்தில் விக்கிரமார்க்கனுடைய அவைக்களத்திலிருந்த நவரத்தனங்களுள் ஒருவரென்று சொல்லப்படுகிற வராகமிகிரரென்ற பிரசித்தசோதிடர், தமது காலத்தில் மேஷாயனத்திற் சூரியனுக்கு அச்சுவினீ நட்சத்திரப் பிரவேசம் உண்டாயிருத்தலை யறிந்து பழைய வழக்கத்திற்கு மாறாக நட்சத்திரங்கள் அச்வினீ முதலாக எண்ணும் வழக்கத்தை வற்புறுத்தினமையின், இக்காலத்தில் நட்சத்திரங்கள் இங்ஙனம் எண்ணப்பட்டு வருகின்றன வென்பர். இவ்வாறு சோதிடம்பற்றி வரவே சோதிட எண்ணம் உண்டாயது. பிறகு கார்த்திகைத் திங்கள் நோக்கினேன். அது குளிர்காலமான கதிர் காலத்தில் வருவது தெரிந்தது. சோதிடஎண்ணம் மன்திலிருந்ததால் இம்மதி விருச்சிகத்திற்கு உரியதையும் பண்டை நாளில் கார்த்திகை மீனுக்கே உரிய மேடத்திற்கும் விருச்சிகத்திற்கும் அதிபதி செவ்வாய் ஆவதும், அவ்வீடுகள்நேரே இருப்பதும் செவ்வாய்க்கு8-ம் பார்வையுண்டாதலால் மேடத்திற்கு 8-ல் விருச்சிகம் இருக்கும் ஒற்றுமைப் பகுதிகளைக் கண்டேன். மற்றும் செவ்வாய் கந்தர்க்கு உகந்த நாள் ஆதலால் கார்த்திகைப் பெண்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கார்த்திகேயனுக்குக் கார்த்திகை மீனில் சிறப்பு தரப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், அதிலும்விருச்சிகத்திற்குரிய கார்த்திகை மதியில் அம்மீனுக்கு அதிகம் சிறப்பு தந்திருத்தல் வேண்டுமென்றும் ஊகித்தேன்.

அம்மீனும் இராசியும் நன்மை பயக்கக்கூடியவை யென்பதைச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையில் காண்க.

புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
மண்ணிய பின்னர் மாலை யணிந்து
நலந்தரு நாளாற் பொலம் பூண்டை
யரசுவாத் தடக்கையிற் பரசினர் கொண்டு.

—சிலப். அரங்கேற்றுகாதை, 121, 124.

" நலந்தரு நாளா லென்றது—இதற்குப் பொருந்திய நல் நாளினாலென்க.

அவையாவன :—பூராடம் கார்த்திகை பூரம் பரணி இரேவதி திருவாதிரை அவிட்டம் சித்திரை விசாகம் மகம் எனவிவை.

நாளென்றது 'நலந்தரு நாள்' என்ற இலேசினால் இராசி முதலியவும் கொள்க.

இராசிகளாவன:—இடபம் சிங்கம் துலாம் கற்கடம் விருச்சிகம் மிதுனம் எனவிவை.

என்னை? "பூராடங் கார்த்திகை பூரம் பரணிகலஞ், சீகாதிரை யவிட்டஞ் சித்திரையோ டாருமுறை, மாசியிடப மரிதுலை வான்கடகம், பேசிய தேன் மிதுனம் பேசு" என்றார் மதிவாணனாரும்."

என்றதால் அறிக.

கந்தன் குறிஞ்சிநிலக் கடவுள் ஆதல் பற்றிமலையில் விளக்கிட்டனர்போலும். இறைவன் சுடரும் சோதி வடிவனும் செம்மேனியனும் ஆதலால் பஞ்சபூத பதிகளில் அனற்பதியாகிய அண்ணாமலையில் அதிக சிறப்புபோலும்.

கார்த்திகை நாளில் நிரை நிரையாக விளக்கிட்டு விழாக் கொண்டாடும் வழக்கம் மிக்கிருந்தது தெரிகிறது.

“ ஆர்ப்பெழுந்த ஞாட்பினுள்
ஆள்ஆள் எதிர்த்தோடித்
தாக்கி யெரிதர
வீழ்தரு மொண்குருதி
கார்த்திகைச் சாற்றிற்
கழிவிளக்கைப் போன்றனவே ”

—களவழி (17)

உரை :—

“ ஆரவார மிகுந்த
போரின்கண் ஆளும்ஆளும்
எதிர்சென்று ஓடித்தாக்கி
படைகளை வீசுதலால்
சொரியாநின்ற ஒள்ளியவுதரம்
கார்த்திகை விழாவில்
மிக்க விளக்கினை
ஒத்தன மற்றும்இதனை
குறுமுயன் மறுநிறங்
கிளரமதி நிறைந்
தறுமீன் சேருமக
லிருண்டு நாண்
மறுகுவிளக் குறுத்து
மாலை தூக்கிப்
பழவிடின் மூதூர்ப்
பலருடன் றுவன்றிய
விழவுடனயா வருகதிலம்ம ”

—அகப்பாட்டு.

“ துளக்கில் கபாலீச்
சரத்தான் றொல்கார்த்திகைநாள்
* * * விளக்கீடு காணாதே
போதியோ பூம்பாவாய் ”

—திருநெறித் தமிழ்மறை.

கார்த்திகைக்கு மலையில் விளக்கிடுவது :—

* * * குன்றிற்
கார்த்திகை விளக்கிட் டன்னகடிகமழ் குவ
[ளைப் பைந்தார்
போர்த்த * * * * *

-சிந்தாமணி. நாமகள் இலம்பகம், (227.)

கார்த்திகை முன்னை நாளில் மிகச் சிறப்பாகக்கொண்டாடியது பற்றியோ கார்த்திகைப் பெண்கள் கந்தனை வளர்த்த முறைபற்றியோ பண்டைய பெண்மக்கட்குக்கார்த்திகையென்னும் மங்கலப் பெயர் சூட்டப்பெற்றார்கள்.

வார்த்திகன் மனைவி கார்த்திகை யென்போள் —104.
கார்த்திகைக் கணவன் வார்த்திகன்—120.

—சிலப்பு—கட்டுரைக்காதை.

அருணகிரியார் மதுரை திருப்புகழில் கார்த்திகை விழா அதிக சிறப்பாதல்பற்றி விலை மாதரும் அவ்விழா வினைக்கூறிப் பொருள் பறிப்பதைக் கூறியுள்ளார்.

“ கார்த்திகை வருதென
வருபொருள் பறிப்பர்”

இம்முடிவுக்கு வருவதற்குள்களைப் புற்றமையால் அருணை தேவாரப் பதிகங்களை முற்றும்பார்த்து (1-10,69; 4-63; 5-118, 119) “அருணை நினைத்திட” என்ற திருவெண்காட்டுப் புராணப் பகுதிக்கு ஏற்ப,

“ மறந்துய்வனோ, நினைவிலேனோ, மறப்பிலேனை, கைதொழ கெட்டுப் போம் வினைகளே, தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே, நினைவார் வினையிலரே, நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலருறை கோயில்” என்பன முதலிய தேவாரப் பகுதிகள் மனதிற் பதிந்தன. சம்பந்தர் 699-ல் அரியும்மாலும் காணா சரித்திரக் குறிப்பு வைத்துள்ளதையும் கண்டேன்.

இவ்வளவும் முடிந்ததும் புன்னெறி யதனில் செல்லும் போக்கினை விலக்கக் கந்தன் கழலடி வாழ்களன முடித்து கருவூலக் கதவடைத்துக் கார்த்திகை விழாக் காணச் சென்றேன்.

கௌரவ. ஸேர். பொன்.

இராமநாதனவர்களின் தேகவியோகம்

“ எல்லாரும் மானிடர்களாவரோ இப்புவியிற்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ ”

இப்பத்திரிகையின் ஆசிரியத்துவம் வகித்த காலந் தொடக்கம் இற்றைவரையில் எத்தனையோ பெரியார் இவ்வுலக வாழ்வை யொருவிய துக்க சமாசாரத்தைக் காலந்தோறும் வெளியிட்டுள்ளோம். ஆனால் இன்று நாஞ் சொல்லப்புகும் இந்தத் துக்க சமாசாரம் முந்தியவைக ளெல்லாவற்றிலும் கொடியதென்பதிற் சந்தேகமில்லை.

தமிழ் மக்களின் சிரோரத்தினமும் இலங்கைச் சனங்களின் முடிசூடா மன்னரும் தமக்கு ஒப்பாரும் மிக்காருமில்லா அரசியல் ஞானியும் சமயாபிமானச் செல்வரும் சாதியபிமானச் சிங்கமும் தேசாபிமானச் சரபமும் பாஷாபிமான வள்ளலுமாகிய இலங்கைப் பெருங்கிழவனார் கௌரவ ஸேர். பொன்னம்பலம் இராமநாதனவர்கள் நேற்று (26—11—30) அதிகாலையில் கொழும்புமா நகரிலுள்ள “ சுகஸ்தானம் ” என்னுந் தமது இல்லத்தில் பன்னூற்றுக் கணக்கானோர் மத்தியில் இவ்வுலக வாழ்வை யொருவினரென்ற தீராத் துக்க சமாசாரம் இங்குள்ளாரெவரும் திடுக்குற்று ஏங்கும்படி நேற்றுக் காலை 10 மணிவரையில் எட்டியது. மானுஷிய வாழ்க்கை அநித்திய மென்பதை யுணர்ந்தவர்களும் எட்டிய தந்திச் சமாசாரம் நிசமென்பதை யறிந்தவர்களும் இந்தப் பெருந் துக்க சமாசாரத்தை நம்பப் பிரியமில்லாதவர்களாய் “ மெய்தானா? உண்மையாய் இறந்துவிட்டார்களா ” என்று மீட்டுங் கேட்கத் தலைப்பட்டனர். யாழ்ப்பாணம் முழுவதுஞ் சஞ்சலத்தோடு காணப்பட்டது; காணப்படுகின்றது. இப்பெரியாரின் பூதவுடம்பு இங்கு எப்பொழுது கொண்டுவரப்படுமென்பதை ஆவலுடன் எதிர் பார்த்தபடியே யிருக்கின்றனர். [பின்னர் சமாதி வைக்கப்பட்டது.]

இந்த இலங்கை நங்கை ஏனைய பெருமக்களைப் பறிகொடுத்த காலத்து ஒவ்வொரு கருமத்திற்றான் குறைவுற்றனளெனலாம். அக்குறைகளுங் கால கதியில் ஏனையோரால் ஒருவாறு நிறைவாக்கப்பெற்றன. ஆனால் ஸேர் பொன் இராமநாதனவர்கள் மரணத்தால் எல்லாவற்றையு மிழந்து இலங்கை மாது கலங்குகின்றனள். சைவ சமய விஷயமாகச் சொல்லுகில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கட்குப் பின்னர் இப்பெரியாரே நஞ்சமய விருத்தியின் பொருட்டுப் பெரிதும் உழைத்து வந்தவரெனலாம். இலங்கையிலுள்ள சிவஸ்தலங்களெல்லாவற்றுள்ளுஞ் சிறந்ததாய் விளங்கும் பொன்னம்பல வாணேசுரர் கோவில் இப்பெரியாரின் பரிபாலனத்தில் அடைந்த விருத்திகள் அளப்பில. இவர் செய்த சைவப் பிரசங்கங்கள் எண்ணிறந்தன. இலங்கையிலுள்ள ஏனைய மதவாதிகட்கும் மேலைத்தேசத்தார்க்கும் சைவத்தின் மகத்துவத்தை எடுத்துக்காட்டி அன்னோர் சைவத்தை யிட்டுக் கொண்டிருந்த விபரீத அபிப்பிராயத்தை நீக்கியவரும், அமெரிக்காவில் சைவத்தின் பெருமையை அங்குள்ளார் பலருக்குந் தெருட்டியவரும் இம்மகானே யாவர். வித்தியா சாலையிற் சமயக் கல்வியைச் சைவ முறைப்

படி சிறுவர் சிறுமியர்க்கு ஊட்டும் வண்ணம் செய்தவரும் இவ்வுத்தமரே யாவர். சமயாநுஷ்டானங்களைத் தமது சாதனை வாயிலாக இங்குள்ளார்க்குக் காட்டி இங்குள்ளாரைப் பின்பற்றச் செய்தும் வந்தார். இப்புண்ணியவான் முகத்தைச் சிவசின்னமின்றிக் காண்டலரிதெனலாம். சைவ சமய விஷயமாக இம்மூதாதை செய்த அரிய விஷயங்கள் எழுத்திலடங்கா.

சாதி விஷயமாகச் சொல்லுகில் புராதன சீர்திருத்தத்தோடும் தெய்வப் பாஷையோடும் தமிழ ரென்றொரு கௌரவமான சாதியார் இலங்கையில், விசேடமாக வட மாகாணத்திலும் கீழ் மாகாணத்திலு மிருக்கின்றார்க ளென்பதை அரசினருக்கும் ஏனைய தேசங்களி லுள்ளார்க்கும் காட்டி வைத்தவர் இவ்வுத்தமரே யாவர். தமிழ் மக்கள் அந்நிய நாகரீகத்தைப் பின்பற்றிமாளாமே காத்தவரும் தமிழ் மக்களைச் சிங்களர் மதித்து நடக்கச் செய்தவரும் இச் சீலரே யாவர். இலங்கையில் தமிழ் மக்களே விவேகிகள், செயற்கருங் காரியங்களைச் செய்யத் தக்கவர்கள், வித்தியாபிமானம் பூண்டவர்கள், நேர்மையுடையவர்கள், சுயமரியாதையை விடாதவர்கள் என்பதைச் சிங்களர்க்கும் அரசினர்க்கும் விளக்கி வைத்தவர் இம்மூதறிஞராவர்.

ஸேர் இராமநாதனவர்கள் நமது தேச விஷயமாகச் செய்த நன்மைகளைச் சிந்திக்கு மிடத்துத் தமிழ்நாடான யாழ்ப்பாணம் கீழ் மாகாண மென்னு மிவைகளோடு மாத்திரம் அமையாது தமிழர் சிங்களவரென்ற பேதம் பாராட்டாது இலங்கை முழுவதற்கும் நன்மையே புரிந்துள்ளாரவர். இலங்கையில் ஸேர் இராமநாதனவர்கள் விளங்கினரெனச் சொல்வதைக் காட்டிலும் ஸேர். இராமநாதனால் இவ்விலங்காபுரி இலங்கலாயிற்றென்று சொல்லுதல் சால்புடைத்தாகும். கோகலே, பால கங்காதர திலகர் முதலாம் அபிமானிகள் பாரத நாட்டில் விளங்கியபிரகாரம் இம்மகானுபவரும் இத்தேசத்திற் றோன்றிச் செயற்கருஞ் செயல்களைச் செய்துவந்தார்.

கல்வி விஷயமாகச் சொல்லுகில் தமிழ் மக்களின் கல்வி விருத்தியின் பொருட்டு இங்குள்ள சனத் தலைவர் எவரினும் இவரே சிறந்த வித்தியாதாதா ஆவர். சிறுவர்கட்குக் கல்வியூட்டுவதோடு மாத்திரம் அமையாமல் சைவச் சிறுமியர்க்கு உயர்தர ஆங்கில தமிழ்க் கல்வியை முதன்முதல் ஊட்ட முன் வந்தவர் இவ்வித்தியாபிமானியே யாவர். சுன்னாகம் இராமநாத வித்தியாலயம், திருநெல்வேலி பரமேசுவரக் கல்லூரி யென்னு மிவையிரண்டும், இராமநாத வித்தியாலயத்தோடிருக்கும் தமிழ் ஆசிரியைகள் கல்லூரியும் இப்பிரபுவின் வித்தியாதானத்தின் சிறந்த ஞாபகமாக எக்காலமும் விளங்கும். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் செய்த அரிய நூல்களுஞ் சிலவுள.

சுருங்கச் சொல்லுகின் இப்பெரியார் தலைமை வகிக்காத சபைகள் சங்கங்களில்லை; இப்பெரியாரின் தொடர்பில்லாத தரும ஸ்தாபனங்கள் பொது ஸ்தாபனங்களில்லை; இப்பெரியாரால் அபிமானிக்கப் படாத சற்கருமங்களில்லை. இலங்கைச் சட்டசபையை ஏறக்குறைய 50 வருட காலமாகச் சிறப்பித்த இம்மகானே இங்குள்ள தமிழ் மக்களுட் சிறந்தவராவர்.

இப்படியான ஒரு புண்ணியவானைப் புத்திரனாகப் பெறுதற்கு இலங்கை மாதாவிற்கு இன்னமும் எவ்வளவு காலஞ் செல்லுமோ யாமறியேம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

—"இந்து சாதனம்."

'SIDDHANTHAM' SUPPLEMENT
to Vol. 3. No. 1.

Registered No. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சைவசித்தாந்த சபை, தூத்துக்குடி

சசு-வது ஆண்டு நிறைவுவிழா

(1929)

சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசியும்
"சித்தாந்தம்" ஆசிரியருமாகிய

ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. எ. பி. எல்.

தலைமைப் பேருரை

அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய், வேறும்
குறியது உடைத்தாய், வேதாகமங்களின் குறியிறந்து, அங்கு
அறிவினில் அருளால் மன்னி, அம்மையோடு அப்பனுகி
செறிவொழி யாதுநின்ற சிவன்அடி சென்னி வைப்பாம்.—**சிவஞானசித்தியார்**

சைவ சித்தாந்தச் செந்நெறியில் நின்றொழுகும் பெரியோர்களே! உங்கள் திருவடிகட்கு வணக்கம். எல்லாம் வல்ல இறைவன் திருவருள், சென்ற ஆண்டு என்னை இங்கு வரச் செய்தது மன்றி, இரண்டு சொற்பொழிவுகளும் நிகழ்த்தும்படி செய்தது. இவ்வாண்டு இப்பேரவைக்குத் தலைமை பூணுமாறு யாதேனு மறியா வெறுந்துரும்பனேற்கு அத்திருவருள் கட்டளை யிட்டதை உன்னுந்தொறும் உன்னுந்தொறும் என் மனம் பெரிதும் வியப்புறுகின்றது. அத் திருவருள் வழி நின்ற இச்சபையினர் என்னைத் தலைமை வகிப்பதற்குத் தேர்ந்தெடுத்ததின் காரணம் என்னே என்னே என்று பன்முறை நான் ஆராய்ந்ததுண்டு. அவ்வாராய்ச்சியில் போதிய அறிவு, ஆற்றல், அநுபவம் முதலிய தகுதிகள் எவையும் என்பாலில்லை என்பது புலனுயிற்று. சமயத்துறையில் பணி செயல் வேண்டுமென்று என்னை ஆட்டுவிக்கும் பேரவாவுக்குப் பற்றுக் கோடாகவுள்ள சைவ சித்தாந்த மகா சமாஜத்தில் எனக்குள்ள தொடர்பே இச்சபையினர் என்மீது வைத்துள்ள கருணைக்குக் காரணம் என்று ஒருவாறு முடிவு செய்தேன். இம்முடிவு எனக்குப் பெரு மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. ஏனெனில் இச்சபையினர் சைவ சித்தாந்த மகா

சமாஜத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையையும் அச்சமாஜம் இயற்றி வரும் அரும் பணிகட்குத் தாங்கள் துணையாக யிருக்க முனைந்து வரும் ஆர்வத்தையும் இது இனிது குறிக்கின்றது. ஆகவே எனக்குச் செய்த நன்றியைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்துக்குச் செய்ததாகவே கருதுகின்றேன். அச்சமாஜத்துக்கே அர்ப்பணம் செய்கின்றேன்.

எனது அருமைச் சகோதரி சகோதரர்களே ! உங்கள் சபையில் நிமித்த காரணராக நின்று எல்லாக் காரியங்களையும் நடத்திவரும் சைவப் பெரியார் எனக்குப் பெரியதொரு கட்டளையைக் கொடுத்துள்ளார். அஃதாவது, எனது தலைமைப் பேருரை, சைவ சித்தாந்தத்தின் உண்மையையும், ஒப்புயர்வற்ற சிறப்பையும், இக்காலத்துக்கேற்றவாறு விளக்குவதோடு, அவைகளை இச் செந்தமிழ் நாட்டினரும், பிறரும் ஐயந்திரிபற உணர்வதற்குரிய வழிகளையும் தெளிவாக உரைக்க வேண்டுமென்பதே. கற்றுத் துறை போய பேரறிஞர்கட்கே இது பெருஞ் சுமையாகத் தோன்றுமாயின் யானோ இச்சுமையைத் தாங்க வல்லேன் ? உங்களுக்குத் தெரியாத பொருள் ஏதோ புதியதாய்ச் சொல்லி விடப் போகிறேன் என்று நீங்கள் எண்ணினால் இறுதியில் ஏமாற்றமடைவீர்களென்று இப்போதே எச்சரிக்கை செய்கிறேன். உங்களுக்குத் தெரிந்தவற்றையே யான் அறிந்த மட்டில் தொகுத்துக் கூற எண்ணியுள்ளேன்.

மேல்நாட்டு அறிவியல் நூலுணர்ச்சியும் அதின் வழிவந்த விஷய சுகம் என்ற இன்ப நுகர்ச்சியும் உச்சியிற் பழுத்துள்ள இக்காலத்தில், கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் என்று தாயுமானாருடன் கதறவேண்டியிருக்கிறது. ஏனெனில் கற்றும் அறிவில்லாதவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. கல்லாத பேர்கள் உள்ளத்தில் சமயவுணர்ச்சி வேரூன்றி யிருக்கிறது. எத்தகைய புறச் சமயப் புயல்களும் அவ்வாணிவேரை அறுக்க இயலவில்லை. ஆனால் ஆங்கிலக் கல்வி பயின்ற நிபுணர்கள் உள்ளத்தில் இச்சமயவுணர்ச்சி என்ற வேர் ஓரங்குல மேனும் பதிந்துளதோ என்பதே ஐயத்துக் கிடமாகின்றது. அவ்வாறு பதிந்திருப்பினும் புறச்சமயத் தாக்குதல் அவ்வேரையறுத்தெறிந்து அந்த நிபுணர்களை வீழ்த்துகின்றது. இக்காலத்தில் ஆங்கிலம் கற்றவர்கள் உலக இன்ப நுகர்ச்சியில் தலை சிறந்து விளங்குவதால் ஏனைய மக்கள் பல வழிகளிலும் அவர்களைப் பின்பற்றுகின்றார்கள். சமயத் துறையிலும் அவர்களைப் பின்பற்றத் தொடங்கினால் நம் தமிழ் மக்கள் சமூகத்துக்கே பெருங்கேடு விளையுமென்பதில் எட்டுணை ஐயமுமில்லை. ஆகையால் ஆங்கிலம் கற்றவர்கள் கூறும் கடாக்களை ஆராய்ந்து அவர்கள் உள்ளத்தில் சைவ சித்தாந்தத்தை நிலைபெறச் செய்தால் இத்தமிழ் நாட்டுக்குப் பெரும் பயன் கைகூடுமென்று நம்பி இரண்டொருவிஷயங்கள் சொல்லலாம் என்று எண்ணியுள்ளேன்.

முதலாவதாக ஆங்கிலக்கல்வி பயின்றோர் பலர் கூறுவது யாதெனில் தங்களுக்குச் சமயம் என்ற ஒன்றே தேவையில்லை என்பது. நல்லொழுக்க வாழ்க்கைக்குக் கடவுள் உண்டென்ற சமயம் இன்றி யமையாதது என்று நாகரிகமுள்ள நாட்டுப் பேரறிஞர்களெல்லாம் ஒருங்கே உரைக்கின்றார்கள். வாழ்க்கைக்கு ஆன்ம விலக்கணமா யிருப்பது சமயம் (" Religion is the spiritual quality of life ") என்று ஒரு மேல்நாட்டு அறிஞர் கூறுகின்றார். மக்கள் வாழ்க்கைக்குச் செம்பொருள்களாகவுள்ளவற்றைக் காத்து அதிகரிப்பதே சமயம் ("Religion is the systematic human effort to conserve and enhance social values ") என்கிறார் மற்றொரு ஆங்கில ஆசிரியர். இவ்வாறே பற்பலர் கூறுகிறார்கள். இவைகளை

யெல்லாம் பெருக்கி விளக்கப் போதின் மைக்கு வருந்துகின்றேன்.

ஒவ்வொரு சமயமும், அதை யனுட்டிக்கும் மக்களால், செம்பொருள்களாகத் தங்கள் வாழ்க்கையில் போற்றப் படும் பொருள்களை யெல்லாம் சேகரித்து, உயர்த்திக் காத்து வந்திருப்பதைச் சரித்திர வாயிலாக அறியலாம். மிகத்தாழ்ந்த நிலைமையிலுள்ள ஆஸ்திரேலியா கண்டத்துப் பழங்குடிமக்கள் அநுட்டிக்கும் இன்டிசியூமா கிரியைகளில் (intichiuma religious ceremonies) கூட பழமை பேணல், ஒத்துழைத்தல், அன்பர்பணி என்ற செம்பொருள்கள் காக்கப்பட்டு வருகின்றன, (tradition of past culture, co operation and social service) என்று ஆசிரியர் மலினௌஸ்கி (Mr. B. Malinowski) கூறுகின்றார். ஆப்பிரிக்கா கண்டத்து பகாண்டா (Bagandas) மக்கள் சமயச் சடங்குகளில் மேற்கூறிய செம்பொருள்களே யன்றி தன்னலம் கருதாமை, அரசனாணைவழி நிற்றல், தேசபக்தி முதலிய செம்பொருள்களும் காக்கப் படுவதாகச் சரித்திரம் கூறுகிறது, (conservation of self-sacrifice, loyalty, obedience, patriotism and other social values). இவ்வாறே நெடுக ஆராய்ந்து சென்று, இப்போது மிகச் சிறந்த நாகரிக முடையவர்களாகக் கருதப்படும் மேல் நாட்டினர் சமயமாகிய கிறிஸ்தவத்தின் செம்பொருள் யாதெனவினவில், அச்சமய வல்லுனர்கள் அறவொழுக்கத்தில் உளம் பழுத்தலே செம்பொருள் என்றும், அது இயேசு கிறிஸ்துவின் ஆன்மா மூலம்தான் கிடைக்குமென்றும் கூறுகின்றனர். (Ethical inwardness is the supreme Christian value; it can be gained through the personality of Jesus Christ) கிறிஸ்துவ சமய வல்லுனர்கள் இவ்வற வொழுக்கத்தில் உளம் பழுத்தல் என்ற செம்பொருளை மூன்று பாகுபாடுக ளாக்கியும் விளக்குகிறார்கள். முதலாவதாகக் கிறிஸ்தவம் இல்லற வாழ்க்கையின் தூய்மையையும், ஆணும் பெண்ணும் உறவாடும் தூய்மையையும் வற்புறுத்துகிறதாம். (Christianity has stood emphatically for the purification of home life and of the relations between the sexes) இரண்டாவதாக ஆருயிர்ப்பணியைவற்புறுத்துகிறதாம். (Christianity stands for humanitarianism) மூன்றாவதாகச் சமூகச் சமதர்ம நீதியை வற்புறுத்துகிறதாம். (Christianity stands for social justice) இத்தகைய செம்பொருளை வாழ்க்கையில் அமைத்துக் கொள்வதற்குக் கிறிஸ்தவ சமயம் ஒரே உபாயம் கூறுகின்றது. அஃதியாதோ வெனில் இயேசு கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரத்தைக் கொண்டு வாழ்க்கையை நடத்துதல் (Christianity sets before men the matchless personality of Jesus Christ, a personality wherefrom they may gain a fuller appreciaton of social values and realise them in their lives) சுருங்கச் சொல்லில் ஒரு அடியார் சரிதையைக் கொண்டு ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையின் ஒழுகலாற்றைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்பதே. மேல் நாட்டு முறையில் ஆராய்ச்சி செய்து கிறிஸ்தவ சமயத்தின் மேன்மையைக் கூறும் மேல் நாட்டு ஆசிரியர் வில்லியம் கெல்லிரைட் (William Kelley Wright) என்பவர் இயற்றிய நூல் ஒன்றில் இவைகளெல்லாம் உள்ளன.

எனதருமைச் சகோதரி சகோதரர்களே! இங்கே சற்றுக் கவனியுங்கள். நாகரிகம் முதிர்ந்த கிறிஸ்து சமயச் செம் பொருள்களையும் அவைகளைக் கைப்பற்றும் சாதன முறையையும் நமது சைவ சித்தாந்த சமயத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அறவொழுக்கத்தில் உளம் பழுத்தல் (i. e., ethical inwardness) நமது சமயத்தில் செம்பொருளாகக் காணப்படவில்லையா? இல்லறத் தூய்மையும் ஆண் பெண் தூய்மையும் நமது சமயத்தில் வற்புறுத்தப் படவில்லையா? ஆருயிர்ப்

பணி ஓம்பப்படவில்லையா? சமநீதி ஓதப்படவில்லையா? இச்செம்பொருள்களை வாழ்க்கையில் அமைத்துக் கொள்ள ஒரு அடியவரல்ல, அறுபத்து மூன்று அடியவர்களின் திவ்விய சரித்திரங்கள் எடுத்துக் காட்டாக விளங்கவில்லையா? அன்றியும் சாதனங்கள் எத்தனை வகையாகப் படிப்படியாக அமைக்கப்பட்டுள்ளன? செம்பொருள்கள் எத்தனை நூற்றுக் கணக்காக நுணுகி நுணுகிப் போதிக்கப்பட்டுள்ளன? பிரமாணம், இலக்கணம், சாதனம், பயன், என நான்கு கூறுகவுள்ள நமது சமய நூல்களில் என்ன போதிக்கப்படவில்லை? இவைகளைக் கற்க நமக்கு அறிவில்லையா, அவகாசமில்லையா, அல்லது ஆவல்தானில்லையா? உடுக்கும் உடைக்காக நாட்டுச் சரக்கை விடுத்துக் கப்பல் சரக்கை வாங்குகிறோம். உண்ணும் உணவிலும் பசும்பாலை விடுத்து கிளாக்ஸோ, (Glaxo) லாக்டோஜன், (Lactogen) ஹார்லிக்ஸ் பால் (Horlicks Malted Milk) முதலிய உணவுப் பொருள்களை நமது குழந்தைகட்குத் தருகிறோம். பெப்பர் மிண்டு (Peppermint), சாக்லேட் (Chocolate), பிஸ்கோத் (Biscuit), டீ (Tea), காபி (Coffee), கொக்கோ (Cocoa) முதலிய கப்பல் சரக்குகளை உட்கொள்ளுகிறோம். நமது நடையுடை பாவனைகளையும் கிராப், நெக்டை, காலர், நிஜார், சாக்ஸ், பூட்ஸ் என்ற மேல்நாட்டு முறையில் வைத்திருக்கிறோம். இவைகளெல்லாம் போதாவென்று சமயத்துறையிலுமா நமது கொள்கைகளையும் செம்பொருள்களையும் கைவிட்டு விட்டுக் கப்பற் சரக்கைக் கைக்கொள்ள வேண்டும்?

மெய்யன்பர்களே! சற்று யோசித்துப் பாருங்கள். திருக்குறளோடு பற்பல அற நூல்களும் சமய நூல்களும் ஞான வொழுக்க நூல்களும் சேர்ந்த ஒரு சமயம் சிறந்ததா? திருக்குறளில் சில அதிகாரங்களை மட்டும் போதிக்கும் ஒரு சமயம் சிறந்ததா? கவனியுங்கள். எதைக் கைவிடுவது சுயமரியாதை யின்மை, எதைக் கைப்பற்றுவது சுயமரியாதை என்பதைக் கூறவும் வேண்டுமோ?

எனதருமைச் சகோதரி சகோதரர்களே! இக்காலத்தின் கொடுமையால், கடவுள் ஒருவர் உண்டென்பதையும் நிரூபிக்கவேண்டி யிருக்கிறது. இதற்கு உந்திகளிறு உயர்போதம் சித்தியில் கூறப்பட்ட பிரமாணங்களைக் கூறினால் இந்நாளில் செவி மடுப்பார் இல்லை. மேல்நாட்டுப் பிரமாணங்களைக் கூறியே உங்களை மகிழ்விக்கிறேன். இவைகளை ஆங்கில ஆசிரியர்கள் ஏழு பிரமாணங்களாக்குகின்றனர்.

1. The Teleological and Evolutionary Argument—இயற்கை யமைப்புப் பிரமாணம்.

2. The Religious Experience Argument—சுவாநுபவப் பிரமாணம்.

3. The Moral Argument—அறநெறிப் பிரமாணம்.

4. The Idealistic Argument—குறிக்கோள்வகைப் பிரமாணம்.

5. The Pragmatic Argument—தொழிற் படுமுறைப் பிரமாணம்.

6. The Realistic Argument—புறத்தோற்ற வுண்மைப் பிரமாணம்

7. The Right to Believe Argument—நம்பிக்கை யுரிமைப் பிரமாணம்.

என ஏழுவகையாக இவைகள் விளக்கப்பட்டுள்ளன. இப் பிரமாணங்களைச் செவ்வனே ஓதி யுணர்கின்றவர்கள் கடவுள் இல்லையென்று மறந்தும் புறங்கூறார்.

தத்துவ நூலாசிரியர்களெல்லாம் கடவுள் படைப்பனைத்தையும் (universe) அகம் (subjective), புறம் (objective) என்று இரண்டாகப்பிரித்திருக்கிறார்கள். எங்கும் உள்ள கடவுள் இவ்விரண்டு பகுதிகளிலும் இருக்கிறார். அகத்தில் கடவுளின் தன்மை, கடவுள் உறவு முதலியவற்றைத் தெளிவிப்பது சமயம் (religion). புறத்தில்

கடவுளின் தன்மை, உறவு முதலியவற்றைத் தெரிவிப்பது தத்துவ சாத்திரம் (philosophy). அகத்தில் கடவுள் திருவிளையாடல்களைக் கூறுவது ஒரு கொள்கை (the doctrine of immanence). புறத்தில் கடவுள் அற்புதத் தனியரசைக் கூறுவது ஒரு கொள்கை (the doctrine of transcendence). இவ்விரு கொள்கைகளும் ஒன்றை யொன்று தழுவியும் இரண்டும் சேர்ந்தவிடத்து முழுவுண்மையை விளக்கியும் நிற்கின்றன. "விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" என்பன போன்ற வாக்குகள் அகக் கொள்கையைத் (the doctrine of immanence) தெரிவிக்கும். "இருநிலனும் விசும்பும் விண்ணும் ஏழுலகும் கடந்து அண்டத்தப் பால் நின்ற பேரொளியை" என்பன போன்ற வாக்குகள் புறக் கொள்கையைத் தெரிவிக்கும் (the doctrine of transcendence.)

மெய்யன்பர்களே! திரிச்சிராப்பள்ளியில் அர்ச். யோசேப்புக் கல்லூரியைச் சேர்ந்த சில ஆசிரியன்மார் இந்திய கத்தோலிக் உண்மைச் சங்கம் (The Indian Catholic Truth Society) என்று ஒன்றை நிறுவி இந்துக்கள் சமயத்திலுள்ள குளறு படைகளை (self contradictions) விளக்குவதாகச் சில நூல்கள் எழுதி யுள்ளார். அவைகளுள் "A Tangled Web" அல்லது "சிக்குற்ற குளறு படை" என்பது ஒரு நூலின் பெயர். அதை இயற்றியவர் நமது சமயக் கொள்கைகளைக் குளறுபடையாகவே காண்கிறார். உதாரணமாக மேற்கண்ட அகப்புறக் கொள்கைகள் இரண்டும் ஒரு சமயத்தில் ஒருங்கே உண்மையாக யிருத்தல் முடியாது என்கிறார். அப்படிக்கிருந்தால் அது குளறு படையாம். நண்பர்களே! சற்று யோசித்துப் பாருங்கள்! அகம், புறம் என்ற இரண்டு பாகுபாடுகள் உள்ள வரைக்கும், கடவுள் எங்குமுள்ளவ ரென்று ஒப்புக்கொள்ளும் வரைக்கும் இவ்விரு கொள்கைகளும் (The doctrines of immanence and transcendence) ஒருங்கே இருத்தல் அவசியம். இக்கொள்கைகள் ஒன்றற்கொன்று மாறுபட்டன வல்ல, ஒன்றை யொன்று தழுவியுள்ளன (not contradictory but supplemental) இரண்டும் சேர்ந்ததே முழுவுண்மை. இதேபோல் அவ்வாசிரியர் Theism, Pantheism and Creationism, Personal God and Impersonal God அதாவது கடவுள், இயற்கைக் கடவுள், படைப்புக் கடவுள், சகுணக் கடவுள், நிர்குணக் கடவுள் என்பன போன்ற ஒன்றற்கொன்று மாறுபட்ட கொள்கைகள் இந்துக்கள் சமயத்திலிருப்பதால் அச்சமயம் பொய்யென்று வாய் கூசாமல் சொல்லுகிறார். என்னே இவர் மதியின்மை! ஒன்றற்கொன்று பற்றிய உறவைக் கொண்டல்லவோ இக்கொள்கைக ளெல்லாம் மாறுபட்டனபோல் காணப் படுகின்றன. (apparent contradictions involved necessarily in describing the Infinite Absolute in terms of finite relationships) இயற்கைக்கு நிமித்தக் காரணனாக வுள்ள கடவுளை இயற்கை யென்றே கொள்வதில் என்ன இழுக்கு இருக்கின்றது? ஷேக்ஸ்பியர் மகா கவியைப் படித்தறிவதென்றால் அவர் முகத்தையும் உறுப்புக்களையும் படித்தறிவதோ? அவரியற்றிய இயற்கையைப் படித்தறிவதோ? அவர் இயற்றிய இயற்கையைப் படித்தவர்கள் அவரைப் படித்ததாகத் தானே கூறுகின்றனர்? ஆகவே "உலகெலாமாகி வேறாய் உடனுமாய் ஒளியாய்" என்ற வாக்கில் அடங்கியுள்ள வியாபகன் (pantheism), அதீதன் (transcendence), அந்தர்யாமி (immanence) என்ற கொள்கைகள் தம்முள் மாறுபட்டன வல்லவே? இவைகளில் ஒன்றைமட்டும் கொள்வது மதியின்மையா? அன்றி மூன்றையும் ஒருங்கே கொள்வது மதியின்மையா? இத்தகைய ஆசிரியன்மார் பிரசாரத்தை மெய்யென்று நம்பி நமது கொள்கைகளைப் புறங்கூறு

வோர் எத்தனை பேர்? உண்மை உணராமல் ஏமாற்றமடைவோர், புறச்சமயம்புகுவோர் ஒவ்வொராண்டுக்கு எத்தனை ஆயிரம்? போதின்மையால் எனையவற்றை விரிவஞ்சி விளக்காது விடுத்தலை நீங்கள் பொறுப்பீர்கள்.

கடவுள் உண்டென்ற சமயங்களெல்லாம் அவரைக் குறியீடாகவும் மக்கள் சாயலாகவுமே அமைத்துள்ளன (i.e., the Conception of God is symbolical and anthropomorphic). எந்தத் துறையில் சென்று பார்த்தாலும் மொழிகளால் வெளியிடுவ தென்றால் மக்கள் சாயலாகத்தான் பேச இயலும் (i.e., Human expression is inevitably anthropomorphic) என்று ஆசிரியர் வில்லியம் கெல்லி ரைட் கூறுகிறார். மலையின் உச்சி, ஊசியின் கண், புத்தகத்தின் காது, ஆற்றின் முகத்துவாரம், கெடியாரத்தின் கைகள், நாற்காலியின் கால்கள், மலையின் அடிவாரம் (i.e., the eye of a needle, the ears of a book, the mouth of a river, the hands of a clock, the legs of a chair and the foot of a mountain) என்றெல்லாம் மக்கள் உறுப்புக்களை வைத்து நாம் சொல்வது தானே வழக்கம். நாற்காலியின் கால்களைக் குறிப்பிடுதற்குக் "கால்கள்" என்ற சொல்லைத் தவிர வேறே எந்தச் சொல்லும் எந்த மொழியிலும் வழங்கப்படுவதில்லை. அறிவியல் துறையில் பார்த்தால் ஓர் அணு மற்றொன்றை "அமுக்குவ"தாக (i e., presses)த் தானே கூறமுடியும். ஆகையால் கடவுள் படைப்பில் எந்தப் பொருளையும் அளப்பதற்கு மனிதனே அளப்பவனுமாகிறான், அளவுகோலுமாகிறான். (i.e., man is both the measurer and the measure of the Universe) ஆகையால் கடவுளை மக்கள் சாயலாகத்தான் வைத்து அறியமுடியும். வேறு வழியில்லை. எனவே, கடவுளை எண்குணத்தாராகக் குறியீட்டிலும் மக்கள் போன்றவராக உருவத்திலும் வழிபடும் நமது சமயக் கொள்கைக்கு இழுக்கென்னை? உருவ வழிபாடு கூடாதென்று கூறும் மேதாவிகட்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். உருவ வழிபாடு கூடாதென்னும் ஆங்கில பிராடெஸ்டண்டு கிறிஸ்தவர்கள் யூனியன் ஜாக் என்னும் கொடியை வணங்குகிறார்கள். ஏன்? அந்தக் கொடி ஒரு குறியீடாக யிருக்கிறது. வெள்ளையும் சிவப்பும் நீலமும் கலந்த ஒரு முழம் துணி என்றெண்ணி ஆங்கில மக்கள் அதை வணங்கவில்லை. தங்கள் தேசத்தின் பெருமையையும் உரிமையையும் இன்னும் பலவற்றையும் அது குறிப்பதாகவே நினைந்து வணங்குவதுமன்றி அக்கொடி நிலைப்பதற்காகப் போர்க்களத்திலும் ஆயிரக்கணக்கானவர் உயிர் துறக்கின்றனர். "A flag is a symbol. Taken literally, a national flag is only a bit of brightly coloured bunting; but vast libraries of history and constitutional law only imperfectly express what the flag symbolises" என்று ஆசிரியர் ரைட் கூறுகிறார். உருவ வழிபாடு கூடாதென்கிற சுயமரியாதை வீரர்கள் தங்கள் மகாநாடுகளில் மட்டும் கொடியேற்று விழாவை ஏன் நடத்த வேண்டும்? அப்படிச் செய்து விட்டுத் திருக்கோயில் கொடியேற்றுவிழாவை ஏன்தூற்றவேண்டும்? இங்கிலாந்து தேசத்துக்குச் செல்லும் வேற்றுநாட்டரசர்களும்பிரமுகர்களும் செனொடாப் (the Cenotaph) என்ற கல்லறையில் பேருரில்லாத வீரன்சமாதிக்குத் (the tomb of the unknown warrior) தவறாமல் புஷ்பார்ச்சனை செய்கின்றனர். (laying wreaths) பேருரில்லாத வீரனுக்கா அந்த அர்ச்சனை? அல்ல அல்ல. தேசபக்தியின் மேலீட்டினால் அவன் உயிர்துறந்த தியாகபுத்தியின் மேன்மைக்கே அந்த அர்ச்சனை நடக்கிறது. அத்தகைய அரிய செம்பொருளுக்கு அவ்வெளிய கல்லறையே குறியீடாக நிற்கின்றது. அக்கல்லறைக்கே அர்ச்சனை, திருவிளக்கேற்றுதல் முதலிய உபசாரங்கள் நடக்கின்றன. ஆனால் கல்லறைக்குச்

செய்த உபகாரம் அதுகுறிக்கும் செம்பொருளைப் போற்றுவதாகத் தான் எல்லா மக்களாலும் கருதப்படுகின்றது.

அஃதேபோல் உலகத்திலுள்ள எல்லாச் செம்பொருள்களுக்கும் உறைவிடமாகவுள்ள கடவுளுக்கு உருவ வழிபாடு உண்டு. புலாலுண்டு, கள் குடித்து, தோள்வலிபெற்ற ஒருவன் குதிரை யேறிய மதுரை வீரனுக்கு புலால், கள் முதலியன கொடுத்து அவனைக் கடவுளாக வணங்குகிறான். சிவலிங்க வழிபாடுசெய்யும் பேரறிஞர் மதுரைவீரனைக் குறைவாகவே எண்ணுவர். அஃதேபோல் மதுரை வீரனைத் தொழுவோர் சிவலிங்கத்தை ஆண்குறி பெண்குறியாகவே எண்ணுவர். ஏனெனில் மீன மேஷ ரிஷபங்களைத் தின்னும் அப்பெரியார்கட்கு மிதுனத்துக்கு மேம்பட்ட தத்துவங்கள் புலப்படா. அறவொழுக்கத்தில் சிறந்து, இருவினை யொப்பு, மலபரிபாகம் கைவரப் பெற்றவர்கட்கே அச் சிவலிங்கம் திருவைந்தெழுத்தின் திருவுருவமாகவும், கடவுள் படைப்பிலுள்ள எல்லாத் தத்துவங்களையும் தன்னுள்ளடக்கிய சிறந்த ஒப்புயர்வற்ற குறியீடாகவும் காணப்படும். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காணவொண்ணாத பால் முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல் வெளிப்பட்டருளுவன் அன்பர்க்கே" என்ற எங்கள் சித்தியார் வாக்குப்படியே அச் சிவலிங்க உருவம் அருள் பாலிக்கும்.

இஃதேபோல் ஆராய்ந்து சென்றால் சமயச் சடங்குகள், மந்திரங்கள், சின்னங்கள், ஜெபம், முறையீடு முதலியவைகளின் உண்மையும் உட் கருத்தும் நன்கு விளங்கும். இவ்வாராய்ச்சிக்கு ஆசிரியர் ரைட் எழுதிய "A Student's Philosophy of Religion" என்ற நூலும், அவரைப் போன்ற வேறுபல நல்லாசிரியர்கள் நூல்களும் பெரிதும் துணை செய்கின்றன. இவ்விடத்தில் பாவம், பாவத்துக்குத் தண்டனை யென்பதைப்பற்றி (i.e., the problem of evil) இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நமது சமயத்தில் பாவ மன்னிப்பு கிடையாதென்றும், கர்மவிதி மிகக் கொடியதாக விருக்கிற தென்றும் (i.e., the law of Karma is inexorable) பலர் எண்ணுகிறார்கள். இது பெருந்தவறு.

"எத்தன்மை குற்றம்
இயற்றிடினும் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்னருளும்
அன்றோ பராபரமே"

என்றும்,

"அழிப்பு இளைப்பாற்றல்"

என்றும்,

"மண்ணுளே சில வியாதி
மருந்துவன் அருத்தியோடும்
திண்ணமா யறுத்துக் கீறித்
தீர்த்திடுஞ் சிலநோ யெல்லாங்
கண்ணிய கட்டிப் பாலும்
கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்
அண்ணலும் இன்ப துன்பம்
அருத்தியே வினையறுப்பன்"

என்றும்,

"குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்
தேன்"

என்றும்,

"இவனுலகில் இதம்அகிதம்
செய்த வெல்லாம்
இதம்அகிதம் இவனுக்குச்
செய்தார்பால் இசையும்
அவன் இவனாய்
நின்றமுறை ஏகனாகி
அரன் பணியில்
நின்றிடவும் அகலும்குற்றம்
சிவனும் இவன் செய்தியெலாம்
என் செய்தியென்றும்
செய்தது எனக்கு
இவனுக்குச் செய்ததென்றும்

பவம் ஆகல உடனுகி
நின்றுகொள்வன் பரிவால்
பாதகத்தைச் செய்திடினும்
பணியாக்கி விடுமே''

என்றும் அழுத்தம் திருத்தமாக விளக்கும் ஆன்ருேர் வாக்குகள் நிறைந்த திருவருள் நெறி ஊற்றெடுத் தோடும் சைவ சித்தாந்த சமயத்தில் கர்மவிதி மிகக் கொடிதென்றும், பாவமன்னிப் பில்லையென்றும் பிதற்றுவாரின் பேதைமை ஞாலத்தின்மாணப்பெரிது.

என தருமைச் சகோதரி சகோதரர்களே! இதுகாறும் கூறியவாற்ருல் உலகத்திலுள்ள எல்லாச் செம்பொருள்களும் நமது சைவ சித்தாந்த சமயத்தில் உள்ளனவென்றும், அச்சமய நெறி உண்மைநெறி யென்றும் மக்கள் சென்று பயன் பெறுதற்குரிய செந்நெறியென்றும் கண்டோம். இதைச் செந்நெறி யென்று காணும்வரை இதில் கூறியுள்ள வழிபாடு, கொள்கை, சின்னம் முதலியவைகளை ஏன் கைக்கொள்ளவேண்டும் என்று பட்டப்பெயரை நீத்த பெரியார்களும் திருநீற்றைக் கைவிட்ட துறவிகளும் கேட்கின்ருர்கள்? இவர்கட்கு ஆசிரியர் மைட்டையே விடை கூற ஏவுகின்றேன். உண்ணும் உணவு எவ்வாறு ஜீரணமாகி இரத்தமாக மாறுகிறது என்ற முறையின் நுட்பங்களை உணர்ந்தார் இவ்வுலகத்துள்ள மக்களுள் கோடிக்கு எத்தனையாக இருப்பார்கள்? மிகக் குறைவேயென்பது வெளிப்படை. ஆனல் அந்த நுட்பங்களை யறிந்தே உண்ணுவோம் என்று சபதங்கூறி உண்ணுவிரதம் கைக்கொள்ளுவோர் எத்தனைபேர்? ஒருவருமே யில்லை. ("Would it be intellectually dishonest for a man to continue to eat food until he had definitely decided the question of digestion? In any event, food *is* digested and he needs it to support life—the theoretical question can be solved at his leisure or never at all.") இச் சுயமரியாதைத் துறவிகள் மற்ருெரு வாதமும் செய்கின்றனர். அதாவது ஒவ்வொருவனுக்கும் தனக்கிஷ்டமான மதக்கொள்கையைக் கடைப் பிடிக்க உரிமை யுண்டென்பது (i.e., freedom of thought.) இதற்கும் ஆசிரியர் மைட்டே விடை கூறுகிருர். "Whenever a student consulted me privately, I advised him to continue in the religious faith and associations in which he had been brought up, unless he had formed deep and rationally grounded convictions that rendered this impossible, which was very rarely the case." அதாவது சுருக்கமாக மதக்கொள்கைகளை மாற்றக்கூடா தென்பதே. இக்கரைக்கு அக்கரை பச்சை என்று மாறுவது விலங்குகளின் தொழில, ஆறறிவுடைய மக்கள் தொழிலல்ல. தன் சொந்த வீட்டை விட எதிர் வீடு நன்ருக யிருக்கிற தென்று மாறினல் எதிர் வீட்டுக்காரன் அடிக்கிருன். தன் மனையாளை விட எதிர் வீட்டுப் பெண் அழகி யென்று கைப்பற்றினல் அவள் தலைவன் கொல்லுகிருன். சமயக் கொள்கைகளை மட்டும் சட்டைகளை மாற்றுவதுபோல் மாற்றினலும் ஏன் ஒருவரும் கேட்கிறதில்லை?

முன்காலத்தில் சமயத்தலைவர்கள் இருந்தார்கள், கேட்டார்கள். இக்காலத்திலோ அத்தலைவர்களின் மடங்களும் அவைகளின் திரண்ட பெருநிதியும் மட்டும் உள்ளன. தலைவர்களைக் காணோம். தலைவர்கள் ஆணைவழி நின்று சமய போதனை செய்த ஆன்ருேர்களையும் காணோம். ஐம்புலன்களை வென்று ஆண்டவர்களைக் காணோம். அவர்கள் இருந்த இடத்தில் ஐம்புலன்களுக்கு ஏவல் செய்யும் அடிமைகளே யிருக்கிருர்கள். இத்தலைவர்களின்பெருநிதி சமய போதனைக்கே அக்காலத்தில் வழங்கப்பட்டது. இக்காலத்திலோ இப்பெருநிதி, முகமன் புறங்கூறும் நேயர்கட்கும், துர் நாரியைச் சேர்ப்பிக்கும் தூயர்கட்கும், லா வென்று சதிகூறும் லாயர்கட்கும், மன்பதையை வஞ்சிக்கும் மாயர்கட்கும், தான் தேடாப்பொன்னுக்கு மாற்று

மில்லை உரையுமில்லை யென்ற முறையில் வாரி வாரி இறைக்கப்படுகின்றது. வாங்கும் கவளத் தொரு சிறிது வாய் தப்பின் தூங்குங்களிறோ துயருறாது. சிந்திய கவளச் சிதைவைத் தின்ற ஆயிரம் சிற்றெறும்புகள் இன்புறும். இம்முறையிலேயே இம்மடங்களில் சிந்தும் பொருளைக் கொண்டு சமய போதனை செய்யலாம் என்று சிற்சில அன்பர்கள் உண்மையாகவே எண்ணியுள்ளார்கள். இதைவிட மானக்குறைவு வேறொன்றுண்டோ? அந்தோ! கொடிது!! கொடிது!! அரசனில்லாத நாட்டுக்கு அரசியற்றலைவரைத் தேர்ந்தெடுப்பது போலவே, இப்போலித் தலைவர்களைச் சட்ட முறைப்படி தொலைத்து சீரிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்குமட்டும் சைவ சமயிகள் ஈடேறுவது இயலாது என்பதைக் கற்றுத்துறை போய ஒழுக்கச்சீலர்களாகிய உங்கள் முன்பு மிகத் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். சேற்றின் நடுவில் செந்தாமரை திகழ்வதைப்போல் இம் மடாதிபதிக் குழுவில் இரண்டொரு சீலர்களும் உளர். எனினும் சீர்திருத்தம் நடந்தே தீரவேண்டும்.

மெய்யன்பர்களே! மதக்கொள்கைகளை மாற்றுவது தவறென்று கண்டோம். இவ்விடத்தே ஆங்கிலக் கல்வி முதிர்ந்த பெரியார் கட்கு ஒன்று கூறுதும். "இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன?" என்ற பழமொழி இத்தமிழ் நாட்டில் வழங்குகின்றது. இதன் பொருள் இவ்விருவரும் செங்கோல் செலுத்திய முறையில் வேற்றுமை யொன்றுமில்லை யென்பதல்ல. யார் ஆண்ட போதிலும் குடிகள் தங்கள் ஒழுக்கங் குன்றாது ஒழுகுவார்கள் என்பதே இதன் பொருள். நம் இந்திய தேசத்திலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களிலும் நடைபெற்று வரும் ஒழுக்கம் இலேசாக மாறுவதில்லை. ஆகவே கிராமச் சீர்திருத்தம் (rural reconstruction) செய்யவேண்டுமென்று வாய்ப் பறையறையும் ஆங்கிலக் கல்வியாளர்கள் கிராமத்தில் காணப்படும் ஒழுக்க மாறுபாடின்மையை (conservatism in culture and tradition) முதலில் கற்றுக் கொள்ள வேண்டும். இலேசாக நாளுக்கு நாள் கொள்கைகளையும் ஒழுக்கங்களையும் மாற்றக் கூடாது. காலஞ் சென்ற திரு. ம. ரா. குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் இத்தமிழ் நாட்டில் எத்தனை உயிர்க் கோணலோ அத்தனை மயிர்க் கோணல்கள் உள்ளன என்று நகைச் சுவை ததும்பக் கூறுவார்கள்.

வேறொரு எச்சரிக்கையும் செய்யக் கடமைப்பட்டுள்ளேன். ஆங்கிலம் கற்றவர்கள் நமது சமய நூல்களை முறைப்படி கற்று, மேல் நாட்டு அறிவியல் நூல்களையும், தத்துவ, சமய, நூல்களையும் பயின்றால் நமது சமய நூல்களிலுள்ள உண்மைகளெல்லாம் மிக நன்றாய்ப் புலப்படும் என்ற கொள்கையில் எனக்குத் திடமான நம்பிக்கையுண்டு. ஆனால் இவைகளை மிக ஆழ்ந்து கற்று ஆராய வேண்டும். இன்றேல் மேல் நாட்டவர் கொள்கைகளே மேம்பட்டவை என்றாவது, அவர்கள் கொள்கைகளுக்கும் நமது கொள்கைகளுக்கும் பேதமில்லை யென்றாவது தோன்றும். இது ஆழ்ந்து சிந்திக்காததினால் நேரும் குறைபாடு. மேல் நாட்டு நூல்களைக் கற்கும் சிலர் சைவ சித்தாந்தம் மேல் நாட்டுக்குச் சென்று விட்டது என்று கூறுகின்றார்கள். இவ்வாறு கூறுவது சைவ சமயத்தின் தற்கொலையே யாகும். மேல் நாட்டினர் நமது பஞ்சைக் கொண்டு போய் பஞ்ச வர்ணச் சேலைகளாக்கி நமக்கே ஒன்றுக்குப் பத்தாக விற்கிறார்கள். இப் பஞ்ச வர்ணங்களும் நமது கண்ணையும், பொன்னையுமே யன்றி மண்ணையும் பெண்ணையும் கூடக் கவருகின்ற சக்தி யுடையனவா யிருக்கின்றன. ஆனால் உண்மையிலே, இப் பஞ்சவர்ணமானது இத்தேசத்திற் குடி கொண்டுள்ள பஞ்சத்தின் வர்ணத்தையே குறிக்கின்றது. அஃதே போல் மேல் நாட்டவர்கள் நமது சமயக் கொள்

கைகளையும் கொண்டு போய் அவர்கள் சமய இயந்திரத்திற் கொடுத்துப் புதுப்பித்து வேறு கொள்கைகளாகவே நமக்கு வழங்குகிறார்கள். ஓரே சிறு உதாரணம் கூறுவேன். ஆசிரியர் ரைட் என்பார் முத்தியைப் பற்றிக் கூறும்போது பாஷாணவாதம், ஐக்கியவாதம், சமவாதம், விவேக முத்தி முதலியவைகளை யெல்லாம் புறக்கணித்துக் கூறுவது எனக்குப் பெரும் வியப்பை விளைவித்தது. அவரை அம்மட்டில் உண்மை ஞானியாகவே கருதுகின்றேன். “What the author favours, then, is an immortality in which separate individuals shall persist, know one another,and enjoy a mutual society; but that this existence shall be in God, and not as souls separated from Him and from one another by physical bodies as is now the case.” இவ்வாறு கூறப்பட்டுள்ளதே சைவ சித்தாந்த முத்தி யென்று உடனே முடிவு கட்டிவிடக் கூடாது.

“ஆதவன்தன் சந்நிதியில் அர்புலியின் ஆர் [சோதி
பேதமற நிற்கின்ற பெற்றிபோல்—நாதாந் [தத்து
அண்ணல் திருவடியில் ஆன்மா வணைந்து
கண்ணில் அழுந்தியிடுங் காண்” [இன்பக்

என்ற உண்மை விளக்கச் செய்யுளிலுள்ள உவமையே மற்றெல்லா உவமைகளை விடச் சைவ சித்தாந்தம் கூறும் பத முத்தியை மிகத் தெளிவாகத் தெரிவிக்கிறதென்று எனது சிற்றறிவிற்குப் புலனாகின்றது. இத்தகைய முத்திக்கும் ஆசிரியர் ரைட் கூறும் முத்திக்கும் உள்ள வேற்றுமையை நன்குணர வேண்டும். இவ்வாறு மேன் மேலும் பெருக்கிச் செல்லலாம். விரிவஞ்சி விடுக்கின்றேன்.

ஆகவே, நமது சமயக் கொள்கைகளை மேல் நாட்டவர் எவ்வாறு கையாளுகின்றனர் என்பதிலிருந்து, நமது கொள்கைகளின் நுட்பங்களைக் கூர்ந்த மதி கொண்டு அறிய வேண்டும். கையாளப்பட்டு, மாற்றப்பட்டு, மீண்டும் வெளிவரும் கொள்கைகளை நமது கொள்கைகளாகவேமீண்டும்காணுதல், நான் முற்கூறியபடி நமது சமயத் தற்கொலையாகவே முடியும்.

எனது அருமைச் சகோதரி சகோதரர்களே! முடிந்தது முடித்தலாக ஒன்றே கூறுகின்றேன். உங்கள் சமயக் கொள்கைகளையும் ஒழுக்கங்களையும் சடங்குகளையும் வழிபாடுகளையும் எக்காரணங் கொண்டும் மாற்றாதீர்கள். மேல் நாட்டு அறிவியல், தத்துவ நூல், சமய நூல் முதலியவற்றின் துணை கொண்டு இக்கொள்கைகளும், ஒழுக்கங்களும், சடங்கு வழிபாடுகளும் எவ்வாறு மேல் நாட்டு நாகரிகத்துக் கேற்பத் திரிந்து அந்நாட்டவர் வாழ்க்கைக்கு விழுப்பம் நல்குகின்றன என்பதை நுணுகி நுணுகி ஆராய்ந்துணருங்கள். அவ்வாராய்ச்சியை உண்மைச் சமயப்பற்றோடு ஆங்கிலக் கல்வியாளர்கள் நடத்துங்கள். உங்கள் சமயத்துக்கு அவ்வழியில் புத்துயிரும் புதுவன்மையும் தேடுங்கள். உங்கள் சமயப் போலித்தலைவர்களைச் சட்ட முறைப்படித் தொலைத்து அவர்கள் பெருநிதியை சமயப் பணிக்கே உரியதாக்குங்கள். உங்கள் முன்னோர்கள் காலத்தில் உங்கள் சமயத்துக்கு வந்த இடர்களைக் களைந்து காத்த சமய சூரர்களைப் போற்றுங்கள். தூற்றாதீர்கள். பால்மணம் மாறாத எங்கள் ஞானச் சேயைப் புலால் மணம் மாறாத ஈனப்பேய்களே கொலை பாதகனென்னும். பரத்தையரைப் புணரும் பாமரமாக்களே, எங்கள் பரவை மணாளனைக் குறை கூறும். எங்கள் மணிவாசகனருளிய திருவாசகம் ஒரு வாசகத்துக்கும் உருகாத மனப்பாறை கட்கேறுமோ? தலையெழுத்தின் துணை பிடித்துப் பிறவிக் கடலில் தடுமாறும் உயிர்கள், ஐந்தெழுத்தின் புணை பிடித்து வஞ்சகரிட்ட நீலநிறப் பெருங் கடலும், யார்க்கும் நீந்துதற் கரிதாம்

ஏழுபிறப்பெனுங் கடலும் நீத்த பிராணடியை எவ்வாறு உணரும்?

அறவொழுக்கத்தில் உளம் பழுத்தல் என்ற செம்பொருளை வாழ்க்கையில் பதித்துக் கொள்ள இயேசு கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரம் ஒன்றே சாதனம் என்று ஆசிரியர் ரைட் கூறுவதை நினையுங்கள். உங்கள் சமயத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு சாதனங்கட்கு நான்கு சமய குரவர்களின் உண்மைச் சரிதைகளே யன்றி அறுபத்து மூன்று நாயன்மார்களின் உண்மை ஜீவிய சரிதைகளும் உள்ளன. அவைகளைப் பயின்று அவர்கள் சென்ற திருவருள் நெறியே செல்லுங்கள். சிவலிங்க வழி பாட்டைக் கைவிடாதீர்கள். திருக் கோயில் வழிபாடு அறிவு குறைந்தவர் கட்கே யன்றிக் கற்றறிந்த மேதாவி கட்குத் தேவையில்லை யென்று எண்ணாதீர்கள். கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழல் என்பதை மறவாதீர்கள். "செம்மலர் நோன்றாள் சேர லொட்டா, அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ, மாலற நேய மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" என்ற உபதேசம் முற்றத் துறந்த முனிவர் கட்கும் கூறப்பட்டதே.

"பாசிபடு குட்டத்திற்
கல்லினைவிட் டெறியப்
படும்பொழுது நீங்கி அது
விடும்பொழுது பரக்கு,
மாசுபடுமல மாயை
யருங்கன்ம மனைத்தும்
அரனடியை யுணரும்
போதகலும் பின்னணையும்,
நேசமொடுந் திருவடிக்கீழ்
நீங்காதே தூங்கு
நினைவுடையோர் நின்றிடுவர்
நிலையிது வேயாகும்"

என்ற எங்கள் சித்தியார் வாக்கை நினைவு கூருங்கள். உங்களுக்குப் பூசை செய்ய விருப்பமில்லாவிடில் பூசை செய்வோரை அழுக்கு மூட்டைகள் என்று ஏசாதீர்கள். பூசை, இறைவனிடம் முறையீடாகிய இவைகளால் மக்கள் அளவற்ற புதிய சக்தியைப் பெறுகிறார்கள் என்றும், ஒரு சமயத்தின் தத்துவ நுட்பங்களை அறியா விட்டாலுங் கூடப் பூசை முறையீடு செய்து இச்சக்தியைப் பெறலாம் என்றும் ஆசிரியர் ரைட் கூறுகிறார். ("We all possess considerable reserve powers of subconscious energy. One means of approach to such reserve powers is found through the agency of prayer. The efficacy of prayer is not dependent on the worshipper's understanding of the philosophy and psychology of the process. The efficacy of prayer is a matter of immediate experience; the existence and nature of God are difficult philosophical questions upon which it is unnecessary for the worshipper to make up his mind in order to receive the benefits of prayer.")

சமயவுண்மைகளையும் ஒழுக்கங்களையும் நீங்கள் கற்பதோடு உங்கள் வயிற்றிற் பிறந்த பிள்ளை கட்கும் இளமையிலேயே கற்பியுங்கள். பெண்களுக்கும் சமய போதனை கொடுங்கள். மக்கள் சமூகத்தில் ஒரு பாதி பெண்ணல்லவா? ஒரு பாதியை மறந்தால் மற்றொரு பாதியின் கதி என்னாகும்?

கற்பதோடும் கற்பிப்பதோடு மட்டும் நிற்காதீர்கள். கற்றதற்குத் தக ஒழுகுவதே கல்வியின் பயன் "வாய் வாழைப் பழம் கை கருணைக் கிழங்கு" என்றொரு பழமொழி நமது நாட்டிலுண்டு. தேனொழுகத் தத்துவம் பேசுவதும் சமயப் பணிக் கென்று எவரேனும் பொருள் கேட்டால் மற்றொரு சமயம் வாருங்கள் என்று கூறுவதும் எத்தனை பிரபுக்களின் வழக்கமாக விருக்கிறது? உண்மை யான சமயப் பணிக்கு "வேண்டுவார் வேண்டுவதே ஈ(வே)ன் கண்டாய்" என்று ஒவ்வொரு செல்வனும் பறைபறைதல் வேண்டும். இவ்

வுண்மையே அறுபத்து மூன்று நாயன்மார்கள் திவ்விய சரித்திரங்களிற் கிடைக்கும் செம்பொருள். சமயப்புரட்டர்கள் நமது சமயக் கொள்கைகளைத் திரித்தும் தாக்கியும்கூறினால், தாக்ஷண்ணியத்துக்காகவோ, தன்னலத்துக்காகவோ வாளாவிருக்காதீர்கள். பெறுதற்கரிய பதினாறு பேறுகளுள் சைவ நிந்தனை பொறுமனம் தலை சிறந்தது. வாளா விருப்பின் சைவ நிந்தனையென்ற குற்றமே, உடன் பாடான உங்களையும் சாரும். இக்குற்றம் கொடிது, கொடிது, இதற் காளாகாதீர்கள். உங்கள் சமயத்தை விளக்குவது உங்கள் கடமையாயிருப்ப, அதையும் செய்யாது, மாற்றான் உங்கள் சமயத்தைக் குறை கூறுங்கால் அதையும் மறுக்காது வாளாவிருந்தால் உங்கள் அறிவையும் செல்வத்தையும் எற்றுக்கோ பயன்படுத்துவது?

சிவஞானச் செல்வம் கைவரப்பெற்ற விழுமியோர்களே! தொன்று தொட்டு வரும் முறையை விடுத்து ஆங்கில முறை பற்றி யான் பேசியதற்கு மன்னியுங்கள். ஆங்கிலக் கல்வி நிரம்பிய பெரியோர்களே! உங்கள் மனம் புண்படக் கூடிய வகையில் யான் ஏதேனும் கூறியிருப்பின் மன்னியுங்கள். அது நான் அறியாது எண்ணாது செய்த குற்றமாகும். என தருமைச் சகோதரி சகோதரர்களே! இது காறும் செவி மடுத்து அன்போடு என் புன்மொழிகளை யேற்ற உங்கள் பொறுமைக்கு மெச்சினேன். என்னையுமோர் பொருளாக்கி இங்கு அமர்த்திய உங்கள் பெருந்தகைமைக்கும் மெச்சினேன். அறிவின்மையாலும் போதின்மையாலும் வேறு பல பொருள்களை விளக்காது விடுத்தமைக்கு வருந்துகிறேன். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் நம் மெல்லோரையும். காத்தருள்வதாக. சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக. தெய்வ வெண்டிருநீறு சிறக்கவே.

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்ட வர்க்கும் இறைவா போற்றி."

திருச்சிற்றம்பலம்

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 160, Govindappa Naicken Street, G. T. Madras.

"சித்தாந்தம்" வி. பி. அறிக்கை

1. "சித்தாந்தம்" மூன்றாவது மலர் இம் மாதத்திய பன்னிரண்டாவது இதழோடு முடிவடைந்தது. ஜனவரி௴ முதல் நான்காவது மலர் தொடங்கும். நான்காவது மலரின் கையொப்பத் தொகையை ஒவ்வொருவரும் 1930௵ டிசம்பர்௴ 31உக்குள் மகாசமாஜக்காரிய தரிசிக்குக் கிடைக்கும்படி மணியார்டர் செய்துவிட வேண்டும். ஒரே ஊரிலிருக்கும் பல சந்தாதாரர்கள் சந்தாத் தொகையைச் சேர்த்து அனுப்பும்போது மணியார்டர் கவுப்பனிலாவது தனியே கார்டு மூலமாவது தங்கள் பெயர், விலாசம், **சந்தா எண்** முதலிய விவரங்களைத் தெளிவாக எழுதித் தெரிவிக்கவேண்டும்.

2. 1930௵ டிசம்பர்௴ 31உக்குள் நான்காவது மலரின் கையொப்பத் தொகையைச் செலுத்தாத சந்தாதாரர்கட்கு நான்காவது மலரின் முதல் இதழ் வி. பி. மூலம் அனுப்பப்படும். அவ்வாறு வி. பி. அனுப்பப்பெற்றுக் கொள்வதினால் ஒவ்வொரு சந்தாதாரருக்கும் வி. பி ரிஜிஸ்தர் தபாற்கூலி வீண் நஷ்டமாகும்.

3. சில நண்பர்கள் வி. பி. வருங்காலத்தில் பெற்றுக்கொள்ளாது மற்றொருமுறை வரும்படியாகத் தபாற்காரனுக்கு அறிவித்து விடுகிறார்கள். பிறகு தபாற்காரன் வி. பி. யை சில நாள் வைத்திருந்து "not claimed" (வேண்டப் படவில்லை) என்று குறித்து சமாஜத்துக்குத் திருப்பி விடுகிறான். இதனால் சமாஜத்துக்கு வி. பி. செலவு நஷ்டமாகிறது. இவ்வாறு வி. பி. திருப்பப்பட்ட சில நாட்களுள் அந்த வி. பி.யைப் பெறவேண்டிய சந்தாதாரர் தாம் ஏதோ காரணம் சொல்லி மீண்டும் பத்திரிகையை அனுப்பும்படி கடிதம் எழுதுவது வழக்கமாக யிருக்கிறது. சென்ற மூன்று ஆண்டிலும் சமாஜம் இத்தகைய அனுபவங்கள் பல பெற்றுள்ளது.

4. ஆகையால் அன்பர்கள் தயைசெய்து சமாஜத்துக்கு வீண் கஷ்டமும் நஷ்டமும் தாராமல் அடுத்த மலருக்குரிய கை யொப்பத்தை முன்னதாகவே அனுப்பி வைப்பது பேருபகாரமாகும் என்று நமது சந்தா நேயர்களுக்கு அறிவிக்கிறோம்.

5. பணம் அனுப்பும் ஒவ்வொருவரும் தமது முழுப்பெயர், விலாசம், **சந்தா எண்** ஆகிய விவரங்களைத் தெரிவித்தல் அவசியமாகும்.

6. இவ்வாண்டு பத்திரிகையைத் தருவிக்கும் ஒவ்வொரு நேயரும் புதிதாகப் பல சந்தாதாரரைச் சேர்த்துத் தர வேண்டுகிறோம். அல்லது ஒரு சந்தாதாரரையேனும் அடுத்த ஆண்டுக்குச் சேர்த்து அவர் கையொப்பத்தையும் சந்தாத் தொகையையும் 1930௵ டிசம்பர்௴ 31உக்குள் சமாஜக் காரியதரிசிக்கு அனுப்பி உபகரிக்க விரும்புகிறோம்.

7. குறித்தபடி மணியார்டர் செய்து அடுத்த ஆண்டுக்குச் சமாஜ அங்கம் வகித்துப் பத்திரிகை பெற விரும்பாமலோ, அல்லது முடியாமலோ இருப்போர், தயை கூர்ந்து அரையணா கார்டு மூலம் நமக்கு அறிவித்து விட்டால் சமாஜத்துக்குப் பொருள் நஷ்டமும் கஷ்டமும் விளையா. பத்திரிகை பெற விரும்பாதாரும், இயலாதாரும் தயை செய்து தெரிவித்தலாகிய உபகாரத்தை யேனுஞ் செய்வார்களாக.

8. ஒவ்வொரு சந்தாதாரரும் தமது திருத்தமான தபால் விலாசத்தைச் செவ்வையாக எழுதி உடனே அனுப்ப விரும்புகிறேன்.

இங்ஙனம் :

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை, 10—12—1930.

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார்,
காரியதரிசி.
சைவசித்தாந்த மகாசமாஜம்.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3—No. 12.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தில்

விற்பனைக்குரிய புத்தகங்களின் அட்டவணை

	ரூ.	அ.
"சித்தாந்தம்" மலர் ஒன்று (பைண்டு பிரதி) ...	2	0
"சித்தாந்தம்" மலர் இரண்டு (பைண்டு பிரதி) ...	2	0
அப்பர் தேவாரம் காலிக்கோ ...	0	12
ஷை ராப்பர் ...	0	10
சுந்தரர் தேவாரம் ராப்பர் ...	0	4
சம்பந்தர் தேவாரம் காலிக்கோ ...		
அப்பர் புகழ்மாலை	0	2
சுந்தரர் புகழ்மாலை	0	2
இயற்கைத் தத்துவ நூலும் சைவ சமயமும் ...	0	2
உமாபதிசிவம் திருமுறைத்திரட்டு ...	0	2
திருக்குறள் விளக்கம்-அறத்துப்பால்.	3	4
ஷை பொருட்பால்.	4	8
ஷை காமத்துப்பால்.	1	12
ஷை தொகுப்புரை.	0	8
புலால்மறுத்தலுக்கு 50 காரணங்கள்	0	2
சர்வமத சம்மதம்	0	2
திருநாளைப்போவார் தீக்குளித்ததேன்	0	2
நள்ளிரவில் நகர்க்காட்சி ...	0	2
கடவுள்	0	2
பண்மயத்த மொழிப்பாவை ...	0	2
சமயத்தின் சாரம்	0	2
சமய வளர்ச்சி	0	2
சுயமரியாதை சம்பாஷணை ...	0	2
திருஞானசம்பந்தர் (நாடகம்) ...	0	8
சைவப் பெரியார் தனிக்கூட்டத் தீர் மானங்கள்	0	2
சங்க நூல்களும் சைவமும் ...	0	2
சைவர் மகாநாடு, திருப்பாதிரிப்புலியூர்	0	8
அறுசமயப் பகுதி	0	2
அறுபத்துமூன்று நாயன்மார் சரித் திர உண்மை	0	4
சிவஞானபோதம்	0	2
அஷ்டப்பிரகாணம்	3	0
சிவார்ச்சனு சந்திரிகை	1	8
சைவபூஷணம்	1	0
சைவ சித்தாந்த பரிபாஷை ...	0	8
சிவஞான சித்தியார் மூலமும் பொழிப் புரையும்	2	8
சிவஞான போதச் சிற்றுரை விளக்கம்	3	8
சர்வஞானோத்தரம்	1	8
தசகாரிய விளக்கம்	0	8
The Grace of Lord Siva (ஆங்கிலத்தில்)	0	4
ஆசார ஒழுக்கமுறை	0	4
சிவார்ச்சனைத் திருமந்திரம் ...	0	1½
திருக்குறட் சாரம்	0	8
ஷை (கலிக்கோ) ...	0	10
அக்ஷமாலிகோப நிஷத்து... ...	0	2
அதர்வசிகோப நிஷத்து	0	2
ஆலங்குடிப் பெருமை	0	2
பெரிய புராணம் (University Lectures) ...	0	4
ஒழுக்கம்	0	2
மரணத்தின் தன்மை	0	4
சிவஞானபோத விளக்கம் (ஒவ் வொரு சூத்திரமும் தனித்தனி)	0	2

சுந்தரர் தேவாரம் மொத்தமாக வாங்குவோர்க்கு ரூபாய் ஒன்றுக்கு ஐந்து பிரதிகள் வீதம் கொடுக்கப்படும். மேற்கண்ட விலைகள் புத்தகக் கிரயம் மட்டுந்தான். தபாற்கூலி வேறு. பார்சல் செலவு, தபாற்கூலி, வி. பி. செலவு முதலியன வாங்கிவோரே செலுத்தவேண்டும்.

மேலேகண்ட அட்டவணையிலுள்ள புத்தகங்கள் தேவையாயின், சமாஜ ஆண்டுவிழா முதலிய கூட்டங்கள் நடக்குமிடங்களிலும் பெறலாம்; கீழ்வரும் விலாசத்துக்கு முன்பணம் அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம்.

திருக்குறள் விளக்கம்

இந்நூற்கண் திருவள்ளுவர் திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும், விளக்கமும் சேர்ந்திருக்கின்றன. இவ்விளக்கவுரை, ஆசிரியர் மாணுக்கர்க்கு அறிவுறுத்துவது போல வரையப் பட்டிருக்கிறது. திருக்குறள் பயில்வோர்க்கு இப்பதிப்பு பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிடப்பட்டுளது.

அறத்துப்பால் காலிகோ பையிண்டு விலை ரூபா		3	4	0
பொருட்பால்	,,	4	8	0
காமத்துப்பால்	,,	1	12	0

பண்டிதர் - கி. குப்புச்சாமி முதலியார்,
3/2, பிள்ளையார்கோயில் தெரு, கிருஷ்ணம்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.